www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-21 01 ஆவணி 2004 விலை:- 07.00

எமது அனைத்து உழைப்பும் சகலவிதமான ஒடுக்கு முறைகளையும் இல்லாது ஒழித்து மானிடமேன்மையை உயர்த்தி நிற்கும் சந்ததிகளுக்காக.




# இரண்டு தசாப்தங்களுக்கு முன்

1983 யூலை தமிழ் மக்களுக்கெதிரான அன்றைய ஐ.தே.க அரசின் இனவன்முறை இலங்கையின் சமூகங்களின் உறவு நல்லெண்ணங்களில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியதென்றால் மிகை அல்ல.

1983ஜுலை இன வன்முறை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் பகிரங்கமாக மக்களிடம் மன்னிப்புக் கோரியிருப்பது கடந்த 50வருட இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முன்னுதாரணமாகும். அதேபோல் தமிழர் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத வன்முறை-அராஜகம் தொடர்பாகவும் மன்னிப்பு கோர வேண்டியது தமிழர் தரப்பின் தார்மீக கடமையாகும்.

1983 இன வன்முறை தொடர்பாக ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்து ஓரளவுக்கேனும் உண்மைகளை வெளிக்கொணர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி எடுத்த முயற்சி இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாகும்.

ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற இவ் வன்முறைகளுக்காக ஐ.தே.க ஒருபோதும் வருத்தம் தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1983இன வன்முறை ஜே.ஆர் 1977இல் பதவிக்கு வரும்போதே தீர்மானிக்கப்பட்ட விடயம் என்பதை உணர முடிகிறது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் பேரில் சமூகங்களைப் பிளவுபடுத்துவதுவும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளும் அக்காலகட்டத்தில் பிரபலமாக இருந்ததை அவதானிக்க முடியும்.

1977,1980,1983 என சிறியகால இடைவெளியில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 1980இல் ஒரே தருணத்தில் 45,000 தொழிலாளர்களின் வேலை பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழ் மக்கள் மீதான வன்முறை என்பது இலங்கை முழுவதும் பரவி வாழ்ந்த தமிழ் மக்களை வடக்கு நோக்கி தள்ளியது.

வடக்கு கிழக்கு தாயகபூமி என்ற எண்ணம் வலுவடைந்தது. இந்த வன்முறைகளின் போது மலையக மக்கள் மிகமோசமான பாதிப்பிற்குள்ளானார்கள்.

இழப்பதற்கு எதுவுமற்ற மலையக மக்களின் இடம்பெயர்வே வன்னியில் அவர்களின் மீள்குடியேற்றத்திற்கான இளைஞர் இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு வழிகோலியது.

1977 இல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து "உங்களுக்கு போர் வேண்டுமானால் போர் சமாதானம் வேண்டுமானால் சமாதானம்" என்று ஜே.ஆர் நையாண்டி பேசினார்.

1980 இல் தனது சகாக்களை வைத்து யாழ் நூல் நிலையைத்தை எரித்தார். 1983 இல் இன வன்முறையை சிங்கள மக்களின் எழுச்சி என வர்ணித்தார்.

இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி விடுத்த கடுமையான எச்சரிக்கை அன்று ஆராவாரித்த சிங்கள பேரினவாதத்தை கட்டுக்குள் கொண்டு வந்ததென்றால் மிகையல்ல.

கறுப்பு யூலை என அழைக்கப்பட்ட இந்த நாட்களில் 22-26 ஆம் திகதிக்குள் இரண்டு தடவைகள் வெலிகடைச்சிறையில் படுகொலைகள் அரங்கேறின. தமிழ் மக்கள் தமது வரலாற்றில் சந்திக்காத கொடுமைகளை இந்த 83இல் அனுபவித்தார்கள்.

தமிழ் ஆயுத ஏந்திய எழுச்சிக்கு வழிவகுத்ததில புதிய வரலாறு ஒன்று உருவாகுவதில் 1983 மாற்றக் காலகட்டமாக இருந்தது.

பாரம்பரியமாக தமிழ் அரசியல தலைவர்கள் நடத்திய போராட்டங்களினூடாக சிங்கள பேரினவாதத்திடம் எதனையும் பெறமுடியாது என்ற எண்ணம் வலுவடைந்தது. 1983 வன்முறைகள் உலகளாவிய அளவில் இலங்கைக்கு பாரிய அவப்பெயரை உண்டாக்கின.

தமிழர்கள் பாதுகாப்பாகவும் சுய மரியாதையுடனும் வாழ்வதற்கான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்து அப்போது தான் தமிழர்கள் மத்தியில் அழுத்தம் பெற்றது.

60ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களின் இனசமத்துவத்திற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் இனியும் பொறுக்க முடியாதென்பது 1983இல் தான் அழுத்தம் பெற்றது.

சிறையில் அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட விதம் வெவ்வேறிடங்களிலிருந்து காடையர்கள் பஸ்களிலும் ரயில்களிலும் கொண்டுவரப்பட்டு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, கொண்டுவரப்பட்ட முறை, அகதிமுகாம்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# தியாகிகள் தினம்

## 19 யூன் 2004



தோழர் பத்மநாபா



தோழர் சுபத்திரன்

மானிடத்தின் பால் அளவற்ற அன்பு கொண்ட, அர்ப்பணமும் தியாகமுமே உருவான எம் மறைந்த தோழர்களை நாங்கள் நினைவு கூருகிறோம்.

இந்த பூமியில் பிறக்கும் மானிடன் எவ்வாறு வாழ வேண்டும், எத்தகைய இலட்சியங்களுடன் வாழவேண்டும் என்பதை எமக்கு வாழும் உதாரணங்களாக இருந்து வாழ்ந்து காட்டிச்சென்றவர்கள் அவர்கள்.

சகல சமூக தளைகளிலிருந்தும் மானிட விடுதலை, சுதந்திரம் என்பனவே இத்தோழர்களின் உன்னத இலட்சியங்களாக இருந்தன. இன ரீதியான பாரபட்சங்களுக்குட்பட்ட தமிழர்களின் விடுதலையை மாத்திரம் அவர்கள் அவாவி நிற்கவில்லை.

அவர்கள் இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, வாழ்க்கை ஏணிப்படியின் அடிமட்டத்தில் துன்புறும் மக்களின் நேசர்களாக வாழ்ந்தார்கள். அவர்கள் ஒளிமயமான ஓர் எதிர்காலத்தை கனவு கண்டார்கள். இன பாகுபாடற்ற சுரண்டலற்ற, சாதி, பிரதேச பேதங்களற்ற உன்னத சமுதாயத்தை அவாவி நின்றார்கள்.

இந்த தகுதிகளுடன் சர்வதேச சமூகத்துடன் நட்புறவு என்பதும் அவர்களின் பெருவிருப்பாக இருந்தது. அழகான உலகத்தையும் அமைதியும், சமாதானமும், சுபீட்சமும் நிலவும் இலங்கையையும் அவர்கள் நேசித்தார்கள். அதற்காக தம்மை முழுதாக அவர்கள் அர்ப்பணித்தார்கள்.

எங்கெங்கெல்லாம் அடக்குமுறைகள் தலைதூக்கினவோ அங்கெல்லாம் அவர்களின் குரல் ஓங்கி ஒலித்தது. வன்முறையற்ற மனிதர்களின் முகங்களில் மகிழ்ச்சி நிலவும் உலகிற்காகவே அவர்கள் இந்த மாபெரும் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

நமது சமூகத்தில் இத்தகைய அபூர்வ மானிடர்கள் பலர் தேடி அழிக்கப்பட்டார்கள், அழிக்கப்படுகிறார்கள். இதனால் எமது சமூகம் மிகப்பாரதூரமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிறந்த தலைவர்கள் எல்லாம், தலைசிறந்த அறிஞர்கள் எல்லாம் அஞ்சா நெஞ்சம் படைத்த போராட்டக்காரர்கள் எல்லாம் கடின உழைப்பை நல்கும் மனிதர்கள் எல்லாம் மரணத்தின் வாயிலை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்கள். இதனால் எமது சமூகம் துவண்டு நிற்கிறது. இதன் பாதிப்புக்கள் நமது சமூகத்தில் தெளிவாக உணரப்படவே செய்கின்றன.

தோழர் நாபா, தோழர் சுபத்திரன்(றொபேட்) போன்ற உன்னதமான தலைவர்கள் ஒரு மாபெரும் சமூக இயக்கத்தினூடாக உருவாக்கப்பட்டவர்கள். இவர்களை அழிப்பதன் மூலம் தாம் சமூகத்திற்கு இழைக்கும் பெருங்கேட்டைப்பற்றி அறியாதவர்கள தமது அதிகார அகங்காரம் ஒன்றையே குறியாகக் கொண்டு செயற்படுகிறார்கள். இந்த செயற்பாடு நல்லவற்றையெல்லாம் அழித்துவிடும் ஒரு பாராதூரமான போக்காகும்.

ஈழப் போராட்ட வரலாற்றில் 65,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரம் கோடி பெறுமதியான சொத்துக்கள் உடைமைகள் நிர்மூலம் செய்யப்பட்டிருக்கின்றன. சுதந்திரத்திற்குப் பதிலாக, எமது மக்களின் கைகளிலும் கால்களிலும் சுதந்திரத்தின் பெயரில் இரும்பு சங்கிலிகள் கட்டப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 2ம் பக்கம்

www.padippakam.com



# கண்ணோட்டம்



## இடைக்கால நிர்வாகம்

வடக்கு-கிழக்கை இடைக்காலம் என்பதனபேரில் நிரந்தரமாக தாரை வார்த்து விடுமாறு புலிகள் கோருகின்றனர். தாங்கள் வடக்கு-கிழக்கு மக்களின் மீது கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை நிறுவுவதற்கும் வரிவிதிப்பதற்கும் அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். முஸ்லீம் சிங்களவர்கள் கூட தமது மேலாண்மையின் கீழ் தான் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த ஐ.எஸ்.ஜி.ஏ புலிகளின் கைகளில் சமூகங்களின் தலைவிதியை எடுத்துக் கொள்வது மட்டுமே. ஜனநாயகம் என்பதற்கு இங்கு மருந்துக்கும் இடமில்லை.

ஆனால் இந்த இடைக்கால நிர்வாகத்திற்கும் தமிழ் மக்கள் தழுவிய சுயநிர்ணயத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது. சுய நிர்ணயம் என்பது முற்று முழுதாக சமூகம் தழுவிய ஜனநாயகக் கோரிக்கை.

சர்வதேச சமூகம் இந்த குழு நிலைப்பட்டகோரிக்கை தொடர்பாக அவ்வளவாக கருத்து தெரிவிக்கவில்லை. எவ்வாறெனினும் பேச்சு வார்த்தை தொடரவேண்டும் என்பதைனையும் சமாதான முயற்சிகள் பலப்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கிறார்கள். இந்தியா இடைக்காலத்தோடல்லாமல் நிரந்தர தீர்வு பற்றியும் பேச வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா அவர்களும் இதனை வலியுறுத்திவருகிறார்.

எது எவ்வாறிருப்பினும் வடக்கு கிழக்கில் ஜனநாயகம் உறுதி படுத்தப்படுவதனால் மாத்திரமே எத்தகைய தீர்வும் முழுமை பெற முடியும்.

எந்த ஜனநாயக கட்டமைப்பும் தேர்தல்- கட்சிகள்- பெருவாரியான ம்க்கள் முகம் கொண்ட பொருளாதார கட்டமைப்பு- மனித உரிமை சிவில் அமைப்புக்கள்- சுதந்திரமான ஊடகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆனால் இங்கு தமிழ் மக்களினது அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. சில பாரதூரமான விடயங்களை ஒரு மரபாக ஏற்றுக் கொள்ளும் வழக்கம் உழுத்துப்போன தமிழ் சமுதாயத்தில் உண்டு. தீண்டாமை என்பது இன்றும் தமிழர்கள் மத்தியில் வேரோடிய விடயமாகும்.

எனவே தமிழ் சமூகம் ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களின் அரசியல் ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களுடன் கலந்து வாழும் முஸ்லீம் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

### கும்பகோணம் குழந்தைகளுக்கு

கும்பகோணத்தில் கீற்றுக் கொட்டகைகள் எரியுண்டு பாடசாலையில் கருகி மாண்ட 75ற்கு மேற்பட்ட சின்னஞ்சிறுசுகளின் மரணங்கள் மானிட மனச்சாட்சியை உலுக்குவன்வாகும். சிட்டுக்குருவிகளின் கனவுகளுடன் பாடசாலைக்குள் தப்பிவர வழியில்லாமல் அவலக்குரல் எழுப்பி மாண்ட செய்தி பேரதிர்ச்சி ஏற்படுத்துவதாகும்.

ஈழத்தமிழர்கள் 1983 இனக்கலவரத்தை அடுத்து அகதிகளாக தஞ்சமடைந்த போது அவர்களுக்கு உணவும் இருப்பிடமும் பாதுகாப்பும் கொடுத்தவர்கள் கும்பகோணத்து மக்கள். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களுக்கு அது சொந்த ஊர் போன்றது. அந்த சிறு நகரத்திலும் அதன் சுற்றாடலிலும் மறக்கமுடியாத ஞாபகங்கள் புதைந்து கிடக்கின்றன. மயானத்திற்குப் பொறுப்பானவர் இந்த பயங்கரம் நடந்த நாளில் மாளாத தனது அனுபவங்களை சொல்லும் போது பெரும் துயரம் சூழ்கிறது.

சிறார்களின் உரிமைகள் பற்றிப் பேசப்படும் காலத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டு வரும் நிலையில் இவ்வாறு பாதுகாப்பற்ற நிலைமைகளில் அவர்கள் வாழ நேரிட்டது துரதிஸ்டமானதாகும். சிறார்களின் பாதுகாப்பு என்பது முன்னிலைப்படுத்தப்படவேண்டிய விடயமாகும். இச்சிறார்களின் பிரிவால் தாங்கொணாத்துயரதில் தவிக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

### ஜனநாயகம் செத்து விட்டகிழக்கு

கிழக்கில் ஜனநாயம் செத்து விட்டதென்றே கூறவேண்டும். எந்த நேரத்திலும் யாராவது கொலை செய்யப்படலாம் அல்லது காணாமல் போகலாம் என்பதே அங்குள்ள நிலையாகும். 2002 யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாததிடப்பட்டதன் பின்னர் ஆரம்பித்த கொலை ஆட்கடத்தல் சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டும் செயற்பாடுகள் இற்றை வரை அதிகரித்தே வந்துள்ளன. இன்று மட்டு-அம்பாறை மாவட்ட மக்களுக்கு துப்பாக்கிகள் மூலம் வாய்ப்பூட்டு போட்டாயிற்று. இவ்வாறு தான் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்திற்கான போரட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மாற்று கட்சியினர் சிறுவர் சிறுமியர் தமது பிள்ளைகளை கொடுக்க மறுக்கும் பெற்றோர் எல்லோருமே அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மூதூரில் முஸ்லீம் மக்ளுக்கெதிரான வன்முறைகளும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. மனித உரிமைகளுக்கான அனைத்து கட்டமைப்புக்களும் மட்டு-அம்பாறைப் பகுதிகளைப் பொறுத்த வரை அடியோடு சீர்குலைந்துள்ளன.

யாழ்பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை,மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு, ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புக்கள் பலதடவை ஆதார பூர்வமாகச் சுட்டிக்காட்டியும் மனித உரிமை நிலவரங்கள் தொடர்ந்து சீர் கெட்டு வருகின்றனவே தவிர முன்னேற்றங்கள் குறை வாகவே இருக்கின்றன. மனித உரிமைகள் தொடப்பில உறுதியான நடவடிக்கைகள் தேவை என்பதையே தற்போதைய நிலவரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

## தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்.

உலகளாவிய அளவில் புலம் பெயர்ந்து விட்ட தமிழ் சமூகம் தமிழ் சமூகமாக உலகில் எதிகாலதில் நிலவுமா என்பது முக்கியமான கேள்வியாகும்.

ஏனெனில் தீண்டாமை, பிரதேச வாதம் என்பன யாழிய கலாச்சாரத்தின் ஒரு பகுதி. அதனை தக்கவைப்பதிலேயே யாழ் தமிழ் வெள்ளாளியம் குறியாகவும் வெறியாகவும் இருக்கிறது.

அதனைத் தகர்த்தெறிவதில் எல்லை கடந்து சென்ற பின்னரும நாட்டம் வரவில்லை. அத்தகைய ஒடுக்குமுறை இல்லாத உலகில் சாதிரீதியாக கீழ்மைப்படுத்தப்பட்டோர் ஏன் தமிழர்களாக வாழவேண்டும் என்று சிந்திப்பது நியாயமானதே.

அடுத்து வடஅமெரிக்க ஐரோப்பிய இயந்திரகதியான சமையல் கூடங்களிலும் வேறு கடும் உழைப்பை நல்கவேண்டிய இடங்களிலும் 10-12 மணிநேரம் உழைக்கும தமிழர்கள் தம்மை அந்தந்த இடங்களின் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினராகவே உணர்கிறார்கள்.

புதிய தலைமுறை பிரான்ஸ் மொழியிலும்,ஜேர்மன்,ஆங்கிலம் ஏன் ஸ்கன்டினேவிய மொழிகளிலேயே உலகைப் புரிந்து கொள்கிறது. வீட்டில் தமிழ் பெரும்பாலும் பேசப்படுகிறது. இடையிடை அந்தந்த நாட்டு மொழிச் சொற்களும் கலந்து. ஏனெனில் வெவ்வேறு நாடுகளில் உள்ள தமது உறவுகளுடன் தொடர்புகொள்ள தேவைப்படுகிறது.

ஆனால் ஈழத்து பலவான்களின் தாஸர்கள்,எழினிகள்,அதியமான்கள்,வேளிர்கள் தமழ் வளர்ப்பதில் மிகுந்த பிரயாசை எடுக்கிறார்கள். ஈழத்து தெய்வங்களுக்காக காவடி எடுத்து அவர்கள தமது தமிழ் பற்றை பறை சாற்றுகிறார்கள்.

பின் நவீனததுவ பாசையில் குறிப்பிடுவதானால் அதிகார பூர்வமான தமிழ் "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே" என்கின்ற தொழுதேத்தப்படும் தமிழ் கட்டுடைய வேண்டும்.

தமிழ் சமூகத்தினுள் நடைபெறும் சமூகபொருளாதார மாற்றத்தினூடாக இது நிகழும் என்று நாம் பறையாமல் இருந்து விட முடியாது. பாரம்பரியம் என்னும் பேரில் மரபுகளை கெட்டியாக கட்டிக்காக்க சமூகப் பின்தங்கலை உறைநிலையில் வைத்திருக்க பொங்கு தமிழர்கள் இருக்கிறார்கள்.

எனவே தமிழும் தமிழர் வாழ்வும் ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும். அது விரிந்த பார்வை கொண்ட மனிதர்களாலேயே முடியும்.

## இரண்டு தசாப்தங்களு...............

களிலும் தமிழர்கள் அவமரியாதை செய்யப்பட் நிலை ஆகியன கூர்மையான அவதானததிற்குரியவை.

தமிழர்களின் பொருளாதாரம் கல்வி, கலாச்சாரம், உயிர்வாழ்வு அத்தனையின் மீதும் ஜே.ஆர் அரசு பாரதூரமான தாக்குதலை நன்கு திட்டமிட்ட முறையில் அரங்கேற்றியது. இதில் ஜே.ஆரின் நோக்கம் என்ன என்பது நன்கு விளங்கிக் கொள்ளப்படவேண்டும்.

அதுவரை வளர்ச்சி பெற்று வந்த பேரினவாதத்தின் குரூரதோற்றம் ஜே.ஆரினூடாக வெளிப்பட்டது.

ஜே.ஆரின் தமிழின விரோத, தொழிலாள வர்க்க விரோதச் செயற்பாடுகளில் 60ஆயிரதிற்கு மேற்பட்டதமிழர்களும் 30ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்களவர்களும் கொல்லப்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இன்று நிலைமையைச் சீரசெய்ய இலங்கை மக்கள் அதிக விலையைச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

ஜனநாயகவிரோத சத்திகளின்

1ம் பக்கத் தொடர்ச்சி

வெற்றியும், இராணுவ மயப்பட்ட சூழ்நிலையும், ஆயுத அராஜகமும், பாதாள உலகச் செயற்பாடுகளும், விரிந்து செல்லும் மத- இனவாதங்களுமாக இலங்கை ஒரு நச்சு சுழலில் அகப்பட்டிருக்கிறது.

இலங்கை பல்லினங்களின் நாடாக மாற்றப்படுவதும், ஜனநாயக வாழ்வொன்று கட்டியெழுப்பப்படுவதும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வதும் தான் இலங்கை சுபிட்சப்பாதையில் செல்வதறகு வழிசமைக்கும்.

## தியாகிகள் தினம்.........

கடந்த கால் நூற்றாண்டுகளில் மகத்தான மனிதர்களை, சமூகத்தின் வாழ்வாதாரங்களை அழித்து மயான அமைதியை நோக்கி எமது தேசம் வழி நடத்தப்படுகிறது.

சமூகத்தின் சுதந்திரமும், தனிமனித சுதந்திரமும் மிகமோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒளிரும் நம்பிக்கையுடன் எக்காரியத்தையும் செய்யமுடியாதவொரு நிலை தோற்று விக்கப்பட்டுள்ளது.

முழுச்சமூகத்தையும் நடைப்பிணங்களாக மாற்றுகின்ற ஒரு போக்கு விசுவருபம் எடுத்துள்ளது. அந்த போக்கிற்கு அடிபணிவதன் மூலம் ஒரு கூட்டத்தினர் வாழத்தலைப்பட்டுள்ளனர். இது ஒரு அவக்கேடான நிலையாகும்.

நாகரீகமான, பண்பான, மனிதநேயமுள்ள, அரசியல் சூழலொன்று எமது சமூகத்தில் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் சகல சமூகங்களுடன் நட்புறவு, உலகுடன் உறவு என்ற உயரிய இலட்சியங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பாரபட்சமற்ற சமூக அமைப்பு ஒன்று வடக்கு கிழக்கிலும் இலங்கை தழுவிய வகையிலும் உருவாக்கப்பட வேண்டும்.

எமது அண்டைநாடும் எமது

1ம் பக்கத் தொடர்ச்சி

கலாச்சாரம், பாரம்பரியம், மொழி மற்றும் சமூக வாழ்வின் தொட்டிலுமான இந்தியாவுடன் உறவுகள கட்டியெழுப்பப்பட வேண்டும்.

காட்டுமிராண்டிதனத்திற்கு பிரதியீடாக மாபெரும் மனிதாபிமான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதுவே உயரிய மானிட இலட்சியங்களுக்காக தமது உயிரை அர்ப்பணித்த இனரும் தோழர்களுக்கு செய்யும் இதய அஞ்சலியாக இருக்க முடியும்.

சுடர் மிகு அறிவுடன் மானிடத்தின் மேன்மையை உயர்த்துவ்தற்கு எம் தியாகிகளின் பெயரில் திடசங்கற்பம் கொள்வோம்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg,**
**Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn,**
**U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
☎ 021 222 2022,

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
☎ 065 22 22307

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
☎ 026 22 27118

**141A , மன்னார் ரோட்**
**குருமன்காடு,**
**வவுனியா.**
☎ 024 22 23102

**சென்செபஸ்த்தியார் வீதி**
**மன்னார்.**
☎ 023 22 32822

www.padippakam.com



# மனிதாபிமானம் கொண்ட புதிய தலைமுறைக்காக.....

அதிகாரப் பகிர்ந்தளிப்பு நடந்ததோ இல்லையோ மீண்டும் தற்கொலைக்குண்டு வெடிக்க ஆரம்பித்திருக்கிறது. இது தமிழர்களின் எதிர்காலத்திற்கு நல்ல சகுனம் அல்ல.

மீண்டும் யுத்தத்தினுள் சிக்க வைப்பதனால் தமிழர்கள் பெற கூடியவை எவை. தமிழர்களின் அபிலாசையின் பேரில் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

தியாகிகள், துரோகிகள் பட்டியல்களும் தமிழர்களின் இன உரிமைக்கான போராட்டத்துடன் விரிந்தன. புலிகள் தமது அரசியல் வறுமை, இராணுவ மேலாதிக்கம் ஆகியவற்றிலிருந்து தியாகிகளையும், துரோகிகளையும் பட்டியலிடும் ஏகபோக அதிகாரத்தை தமதாக்கி கொண்டனர்.

புலிகளால் உருவாக்கபட்ட பட்டியிலின் படி தான் தமிழர்களின் வாழ்க்கை நிர்ணயிக்கப்பட்டது.

புலிகளின் தனிமனித அதிகார அபிலாசைகளுக்கு தமிழ் தேசியம் ஒரு நல்ல போதையூட்டும் சாதனமாக அமைந்தது.

போதைவஸ்துப்போல் சிறுவர் சிறுமியரின் உள்ளத்தில் அது விதைக்கப்பட்டது. அவர்களுடைய மரணம் கூட மரணம் என்றல்ல விதைப்பு என்றே அழைக்கப்பட்டது.

சமூகத்தில் ஒரு பகுதியினரை குண்டுகளாக மாற்றி வெடிக்க வைக்கும் போது தமிழர்களில் அதிகப்பிரசங்கிகளான சில புத்திஜீவிகள் எனப்பட்டோர் இதற்கு உற்சாகம் ஊட்டுபவர்களாக செயற்படுவதை நாம் காணமுடிகிறது.

அரசியல் சமூக கலாச்சார இருப்பின் மீது ஆயுதமேலாண்மையின் பாதிப்பு இருப்பதால் அந்த ஆயுத மேலாண்மையுடன் சமரசம் செய்து கொண்டு அதிலிருந்து வாழ்வது கருத்துச் சொல்வது என்பது தமிழ் சமூகத்தில் ஒரு முறையாகிவிட்டது.

இதன் காரணமாக தமிழ் ஊடகங்கள் என்பவை சமகாலத்தின் ஒருபகுதி உண்மைகளை திரித்து வெளியிடுபவனவாகத் தேய்வடைந்துள்ளன.

கேவலம் அவை ஊடக அடியாள் கூட்டமாக மாறியுள்ளன. தற்கொலைக் குண்டுதாரிகளினூடாக தமிழ் சமூகத்திற்கு கிட்ட கூடியதென்ன என்று இவர்களால் கூற முடியுமா?.

முதலாவது தற்கொலைக் குண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் மீதே பிரயோகிக்கப்பட்டது. இத்தாக்குதல் மூலம் ஈழத்தமிழர்களுக்கும் இப்பிராந்தியத்திற்கும் இழைக்கப்பட்ட பெருந்தீங்கு எந்தப் பாமரனும் புரிந்து கொள்ளக் கூடியது.

இன்று ஒடுக்குமுறை அரசுகள் மாத்திரமல்ல விடுதலை என்று புறப்பட்ட வன்முறைக் குழுக்கள் பலவும் எந்த ஒரு மக்கள் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக உருவாகியுள்ளன.

அமெரிக்க இரட்டைக்கோபுரங்கள் மீது மாத்திரமல்ல, இந்தோனேசிய பாலியிலும் கென்யாவின் நைரோபியிலும் வேறு இடங்களிலும் பெருமளவு மக்களிற்கு பெருநாசம் விளைவிப்பவையாக இவை உருவாகிவருகின்றன.

பொல்பொட் பினோச்சே போன்றவர்கள் மனித குலத்திற்கு எத்தகைய பெருந்தீங்கை விளைவித்தார்களோ அவர்களுக்கு கொஞ்சமும் குறையாத அளவிற்குத்தான் இலங்கைத்தமிழ் தேசியத்தின் விடுதலை வீராகள் என்று தம்மைப்பிரகடனம் செய்வோர் செய்துவருகின்றனர்.

உலகின் அறிவு விரிவடைந்து வருகையில் பல்வேறுபொருளாதார இயற்கைச்சவால்களை உலகம் எதிர்கொண்டு வருகையில் தமிழ் சிறுவர் சிறுமியரின் கல்வியை மறுத்து அவர்களை வெடிகுண்டுகளாகவும் வெடிகுண்டு வீசுபவர்களாகவும் யுத்தத்தில் மரணிப்பவர்களாகவும் உருவாக்கி வருவது எவ்வளவு பெரிய குரூரம்.

மானிட தர்மங்களுக்கான போராட்டம் பெருமளவு மக்களின் பங்கு பற்றலோடு பெரும்பான்மை மக்களின் பங்களிப்போடு நடைபெறவேண்டும்.

ஆனால் இங்கு மானிடத்தின் உயரிய விழுமியங்களுக்காக அல்ல போராட்டம் நடைபெறுகிறது. கேவலம் கடைகெட்ட அதிகாரத்திற்காக. அகங்கார ஆட்சியை நிறுவுவதற்காக. மாற்றுக்கருத்துக் கொண்டோர் அதிகார மேலாண்மையைபூசிக்காதோர், பகுத்தறிவுள்ளோர், சுதந்திர உணர்வுள்ளோர் எல்லோரும் கொல்லப்படவேண்டிவர்கள் என்பதே இவர்களின் முடிவு. அதில் கூச்ச நாச்சம் எதுவும் இல்லை.

இந்தப்போக்கு நாகரிக உலக சமூகத்தவரால் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. 2002இல் இருந்து இற்றைவரையிலான ஜனநாய விரோத செயற்பாடுகளும் கபடத்தனமான மூடிமறைப்பு முயற்சிகளும் சகல விடயங்களிலும் ஜனநாயமற்ற அணுகுமுறைகளும் சர்வதேச அரங்கில் தெளிவாக புரியத் தொடங்கியுள்ளன.

இனிமேலும் சர்வதேச சமூகம் எங்களின் பின்னால் நிற்கிறது என்று நீண்டகாலத்திற்கு சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

ஆசியாவின் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா இலங்கை விவகாரங்களில் காணப்பட்ட உண்மைத்தன்மை அற்ற வஞ்சகத்தனமான செயற்பாடுகளினாலேயே சற்று ஒதுங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

ஐரோப்பிய ஸ்கன்டினேவிய நாடுகளுக்கு விளங்க அதிக காலம் பிடிக்கப்போவதில்லை.

பல்வேறு விதமான பாரபட்சங்களையும் வேறுபாடுகளையும் கொண்ட தமிழ சமூகத்தில் காட்டுமிராண்டித்தனங்களை விளங்கிக் கொள்வதற்கான இடைவெளி குறைவாகவே காணப்படுகிறது.

இதனால் இச்சமூகம் தன்னைச் சுதாகரித்துக் கொள்ள நீண்டகாலம் எடுக்கலாம். இது தன்னைச் சுதாகரிக்கும் போது எல்லாம் முடிவடைந்து விட்டிருக்கலாம். அல்லது அது தன்னைச் சுதாகரிக்கும் நிலை உருவாகுமா என்றும் கூறமுடியாது.



ஆனால் அதிஸ்டவசமாக திறந்த உலகைதரிசித்து புதிய தலைமுறைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

முன்னோக்கிய தாராண்மைவாத காருண்ணியம் ஜனநாயக உணர்வு கொண்ட புதிய தலைமுறை ஒன்று உருவாகிவருவதையும் நாம் மறுத்து விட முடியாது. அடக்குமுறைகளினுள்ளேயே ஜனநாயக உணர்வு பிரவாகிக்கலாம். சிறு பொறியாக அது கிளம்பலாம்.

தமிழர்களின் தேசிய அடையாளத்தை மறுக்கும் பேரினவாதமும் அதன் உருவாக்கத்தில் தாமதங்களை ஏற்படுத்துகின்றது என்பது மறுப்பதற்கில்லை.

# இயற்கைக்குள் மனிதனும்..... மனிதனிற்குள் இயற்கையும்....

இயற்கை பலமானது. சக்தி வாய்ந்தது. எமக்குள் உள்ள பல கேள்விகளுக்கு பதில் தரக்கூடியது. உங்களது சோகங்களை, வலிகளை இழப்புகளை இயற்கையுடன் பரிமாறுங்கள். அப்போது அது உங்களை அணைத்து கொள்ளும் வலிகளை தடவி காயங்களை ஆறவைக்குகம்.

இயற்கையுடன் பேச பழகுங்கள். உங்களை சுற்றி உள்ள காற்றில் உள்ள ஈரத்தை மென்மையான புலன்களால் உணருங்கள், அதனை உங்கள் உணர்வுகளால் பரிச்சித்து புரிந்து நேசம் கொள்ளுங்கள். அப்போது அதுவும் உங்கள் கண்களுக்குள் தேங்கி நிற்கும் ஈரத்தை அறிந்துகொள்ளும்.

எமது வேர்கள் எல்லாம் எம்மைச்சுற்றியுள்ள இந்த மண்ணுக்கடியில்தான் புதைந்து கிடக்கின்றது. காலில் உள்ள செருப்புகளை தூர எறியுங்கள். மண்ணில் மண்டியிட்டு பூமியை முத்தமிடுங்கள். நீங்கள் என்றோ தொலைத்த அந்த வேர்கள் மண்ணுக்கடியில் சலசலப்பதையும் அது மறுபடியும் உங்களுடன் இணைய முயற்சிப்பதையும் உணர்ந்து கொள்வீர்கள்.

மனிதனைப் போல் இயற்கைக்கும் எத்தனை எத்தனை உணர்வுகள் வெப்பம், குளிர்மை, தாகம், கோபம், இதனால்தான் சொல்கிறேன் எமக்குள் உள்ள உணர்வுகளை இயற்கையால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். அதனுடன் நீங்கள் தனியே அமர்ந்து பேசுங்கள் காற்றின் மூலம் அது இயற்கையுடன் கலக்கும்.

இயற்கையைவிட்டு நாம் வெகுதூரம் விலகிப்போகும் போது மனோரீதியாகவும், உடல்ரீதியாகவும் நாம் பலவீனமடைகிறோம். சோர்ந்து போவதுடன் அலைக்கழிந்து போகிறோம். பிறப்பின் அர்த்தத்தை இழந்து மின்விளக்கு வெளிச்சத்தில் தொலைந்த விட்டில் பூச்சிகளாகின்றோம். அப்போதுதான் மனித வாழ்வு போராட்டம் நிரம்பியதாக தோன்றுகின்றது.

இவ்வளவு காலமும் விடையே கிடைக்காத அந்த கேள்விகளுக்கு எமக்குள்தான் விடை உள்ளது. அதனை நீங்கள் கண்டு பிடிக்க இயற்கையின் துணை வேண்டும். தேசம் தேசமாக நீங்கள் தேடி அலைந்தாலும் தொலைத்த உங்களை நீங்கள் இயற்கையின் மூலமாக மட்டும்தான் கண்டுபிடிக்கமுடியும். அதற்கான பலத்தை ஆத்மாவிற்கு இயற்கையால் மட்டுமே கொடுக்கமுடியும். மழை பெய்யும் போது ஒதுங்கிக்கொள்கின்றீர்களா? இந்த மண்ணுடன் அது சம்பாசிப்பது உங்களுக்கு என்ன எரிச்சலையா தருகின்றது? வானத்திற்கும் பூமிக்குமிடையில் பரிமாறப்படும் தொலையில்தான் எத்தனை சலசலப்பு, அந்தரங்கம். இந்த அரங்கேற்றத்தில் நாம் ஏன் இணைவதில்லை.

வானத்திற்கும் பூமிக்கும் இடையில் சுவாசித்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களான நாங்கள் ஏன் இந்த புனித விழாவில் கலந்து கொள்ளவதில்லை. மழையில் நனைந்து பரிசிப்பதில்லை. அவைக்குள் நடக்கும் தொடுகை வாக்குவாதமா? இல்லை. அன்பு பரிமாற்றமா? புரிந்துகொள்ள ஏன் நாம் முயற்சிப்பதில்லை?

மொழி பேசாத எவற்றையும் மனிதன் தாழ்மைப்படுத்துவான் தன்னை விட துச்சம் என கர்வம் கொள்வான். வேர்களை தொலைத்ததால் எமக்கு பயம். வார்த்தைகளை தவிர்ந்த வேறுமொழிகளை மறந்து போனதால் எமக்கு பயம், பரந்து கிடக்கும் இயற்கையுடன் தொடர்பு அறுந்து போனதால் மனதுக்குள் நடுக்கம்.

காற்று ஊதி உப்ப வைத்த பலூன் தன் கயிற்றை அறுதது அலைந்து திரிவது போல் வாழ்க்கையில் தடுமாறிப்போகின்றோம். திசை தொலைந்து போகின்றோம். அந்தரத்தில் மிதப்பதனால் நிரந்தரமில்லாத காற்றுடன் கனவுப் பயணம்.

இருளுக்குள் கருக்கட்டும் அந்த அழகிய நிசப்தத்தில் புல்லின் நுனியில் அமர்ந்திருக்கும் பனிமுட்டையை மூச்சு சுவாசத்தினால் உடைக்காமல் ஆழ்ந்த நிசப்தத்தை பரிச்சியப் படுத்துங்கள். மரண பயம், ஜனனத்தின் பொறுப்புகள், புழுத்து போகும் வெற்றிகள், துரத்தியடிக்கும் கீழ் பிடித்த தோல்விகள் எல்லாவற்றையும் களைந்து விட்டு பூமிக்குள் காதை ஒட்ட வைத்து கேளுங்கள் எத்தனை சம்பவங்கள்.

மழைத்துளிகள் மண்ணில் விழும் சத்தங்களும், மரத்தில் உறங்கிக் கொண்டிருந்த பறவைகளின் எச்சங்கள் மண்ணை தொடும் சத்தங்களும், இந்த பூமியில் பிறந்த அழகான பூக்களின் மகரந்தங்களை களவாடிச் சென்ற அதே வண்டுகள் பூமியின் மண்துகள்களை அழகாக உருட்டி தம் இருப்பிடம் தேடுகின்றது.

சிலகாலங்கள் மட்டும் உயிர் வாழும் அற்ப மனிதர்களின் கண்களில் நாம் வாழ்க்கையை நம்பிக்கையை தேடுகிறோம். அவர்களிடம் நட்பை கேட்கிறோம். காதலை யாசிக்கச் சொல்கிறோம். ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொண்டு பொய்யான நம்பிக்கையை பூசி அலங்கரிக்கின்றோம்.

ஆனால் காலம் காலமாக உயிர்ப்பை மட்டும் பிரகடனப்படுத்தி உயிர்களை பாதுகாக்கும் இயற்கையை அலட்சியப்படுத்துகிறோம். அதனை நம்ப மறுத்து ஒதுங்கி வாழ்கிறோம்.

இதயத்துடிப்பில்லாத விதையைக்கூட துளிர்க்கச் செய்யும் அந்த இயற்கையிடமா உயிர் இல்லை? எல்லாவற்றையும் இயற்கையிடம் பெற்று அதனிடம் ஒப்பித்து விட்டு போகும் நாம் இயற்கைக்கும் எமக்குமான இறுக்கமான தொடர்பை தூண்டிக்கப்படமுடியாத பந்தத்தை உணர்ந்துகொள்வோம்.

பாதங்களை மண்ணில் பதித்து மறுபடியும் பூமியுடன் இணைந்து கொள்வோம். தொலைத்து விட்ட அந்த வேர்களை மறுபடியும் எம்முடன் பொருத்திக்கொள்வோம்.

நன்றி:- பெண்கள் சந்திப்பு மலர் 2001

படிப்பகம்

www.padippakam.com



# உயிர் வாழ்வதற்கான உரிமை

சமாதானம் என்பது தற்போது ஊசலாடும் விடயமாக மாறிவிட்டது.

பெரிய பெரிய போர்கள் நடைபெறாவிட்டாலும் பயங்கரங்கள் கொலை குரூரங்கள் நிறைந்ததாகவே இச் சூழல் காணப்படுகிறது.

தமிழ் மக்களின் அபிலாசையின் பேரில் தான் தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மை அர்ப்பணித்திருந்தவர்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ் அதிகார அகங்கார வெறி அவர்களை காவு கொண்டது.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் தமிழ் சமூகத்தில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்பட்டன என்பது ஆய்வுக்குரியது. அந்த மாற்றங்கள் தமிழ் மக்களை முன்னோக்கிய திசையில் அழைத்து சென்றுள்ளதா அல்லது நரகப்படுகுழியை நோக்கி வழி நடத்தியுள்ளதா என்பது முக்கியமானதொரு கேள்வியாகும்.

எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய பல உண்மைகள் இருக்கின்றன. யார் யாரையெல்லாம் அழித்தார்கள் என்பதை வைத்து அழித்தவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் சமூகத்தில் நல்லன எல்லாவற்றையும் அழித்து தீமையை பெருந்தீங்கை சமுதாயத்திற்கு விளைவித்த புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரிதிநிதிகள் தாமே என்று வலிந்து திணிப்பொன்றை, சுமையொன்றை தமிழ் மக்கள் மேல் ஏற்றி வருகிறார்கள்.

தாம் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பது தமிழ்மக்களின் அனைத்து அபிலாசைகளுக்கும் தாமே பொறுப்பென்பதே. அதிலிருந்து கிளம்பும் அடுத்த வாதம் தமிழ் மக்களுக்கென்று எந்த அபிலாசைகளும் இல்லை என்பதே.

அவர்கள் அறிவீனர்கள் அல்லது பிராணிகள் அல்லது உணர்ச்சியற்ற பகுத்தறிவற்ற சடங்கள் முடங்கள் என்பதே. அவ்வாறு வாழ்வதற்குத்தான் ஊரில்வாழும் மக்கள் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த தேர்தலில் கையாலாகாதவர்களாக தமிழ் மக்கள் மாற்றப்பட்டிருந்த நிலை நன்கு புலனாகியது. புலிகள் எது செய்தாலும் அவர்கள் தட்டிக்கேட்க முடியாத நிலை காணப்பட்டது.

புலிகளின் ஆயுத அராஜகம் இதற்கு ஒரு பிரதான காரணம். ஏன் எதற்கு என்று சிந்திப்பவர்கள் சிந்திப்பதே உயிராபத்தை ஏற்படுத்தும் விவகாரம். இந்த நிலையில் புலிகளின் பிரதிநிதிகள் இலகுவாக யாழிலும் வன்னியிலும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

ஆனால் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் கருணா அணியினரின் மேலாண்மை அப்போது காணப்பட்டபடியால் வன்னிக்கு நம்பிக்கையான யோசேப்பும், சந்திரநேருவும் தோல்வியைத் தழுவினார்கள். இவை தான் ஏப்பிரல் இரண்டாம் திகதி பொதுத்தேர்தலின் இலட்சணம்.

இந்த தேர்தல் தொடர்பாக பல்வேறு சர்வதேச அமைப்புக்களும் கருத்து தெரிவித்துள்ளன. ஐரோப்பிய யூனியன், பொதுநலவாயம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் வடக்கு-கிழக்கு தேர்தல் வன்முறைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் தமிழ் ஊடகங்கள் எனப்படும் புலி ஊடகங்கள் 1977 இன் பின்னான சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஆணை என நீட்டி முழங்கின.

மக்கள் புலிகளை தமது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று வியாக்கியானம் செய்தன.ஒரு அம்மணமான மோசடித்தேர்தல், புலிகளால் போலி வாக்காளர் அட்டை வழங்கப்பட்டு நடத்தப்பட்ட தேர்தல்-புலிகள் ஜனநாயக அரசியலில் பெற்ற வெற்றி என்று பொய் அவிழ்த்து விடப்பட்டது.

புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள அவர்களிடம் தான் இடைக்கால நிர்வாகத்தை கொடுக்க வேண்டும் என்றெல்லாம் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அடித்துக் கூறினர்.

தத்தமது கட்சிகளின் தலைவர்கள், தொண்டர்களை, தோழர்களை புலிகள் ஈவிரக்கமின்றி கொன்று தள்ளியதை பதவிச் சுகத்திற்காக அடியோடு மறந்து போன இந்த பிரகிருதிகள் இப்போது வெள்ளையும் சள்ளையுமாக பாராளுமன்றத்திலும ஏனைய விருந்துபசாரங்களிலும் வலம் வருகிறார்கள்.

தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் உண்டு என்பதைவிட தமக்கு பதவிகள் உண்டு எனபதே இவைகளின் ஞாபகத்தில் உண்டு.

புலிகள் மற்றும்படி யாரைக் கொன்றால் என்ன அதற்கு நியாயம் கற்பிப்பது தான் இவர்களின் தொழில். அதனால் எந்த விடயத்தையும் சுய சிந்தனைக்கெடுக்காத புலிகளால் உருவாக்கப்பட்ட நவீன ரோபோக்கள் இவை. ரோபோக்களின் நாடான யப்பானின் அகாசி கூட இந்த ரோபோக்களை கண்டு பிரமித்திருப்பார்.

புலிகள தாம் ஏகப்பிரிதிநிதிகள என்று தம்மை வரிந்து கொண்டது படுகொலைகள் சித்திரவதை என்ற மனிதகுல விரோத வழிமுறைகளினூடாகவே. தற்போது மோசடித்தேர்தலின் ஊடாக தமது முகவர்களை வெற்றி பெற வைத்து விட்டு ஜனநாயக வழியிலும் வெற்றி பெற்றதாக பறை சாற்றுகிறார்கள்.

தமிழ் சமூகத்தின் மீது அக்கறை கெண்டவர்கள் ஏன் இலங்கையர் சமூகத்தில் மானிட வர்க்கத்தில் அக்கறை கொண்டவர்கள் புலிகளின் கொடூரங்களை யிட்டு மௌனமாக இருக்க முடியாது.

தேசிய ஒடுக்குமுறையின் பாற்பட்டு பௌத்த சிங்கள பேரினவாதம் இழைத்த கொடுமைகளுக்கு நிகராக புலிகளும் தமிழ் சமூகத்திற்கெதிராக அடக்குமுறைகளைப் பிரயோகித்திருக்கிறார்கள்.

இன்று தமிழ் மக்களின் விடுதலைக்கு அவர்கள் பெரும் தடைக்கற்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். முஸ்லீம் மக்கள் தமது வாழ்விடத்தில் தமது சுதந்திரமான இருப்பு தொடர்பாக அச்சம் கொண்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் விடுதலை என்பது- சுயநிர்ணயம் என்பது முற்றுமுழுதாக ஜனநாயக வகைப்பட்டது.

ஆனால் இங்கு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மாத்திரமல்ல-முஸ்லீம் மக்களின் ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன.

புலிகள் கேட்கும் இடைக்கால நிர்வாகம் என்பது கூட தமிழ் மக்கள் மீது தமது கேள்விக்கிடமற்ற மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான கோரிக்கையே அன்றி தமிழ் மக்களின் அபிலாசைகளுடன் தொடர்புபட்டதல்ல.

அவ்வாறானால் தமிழ் மக்களின் அபிலாசைகள் எவை என்ற கேள்வி எழும். தமிழ் மக்களின் அபிலாசைகள் என்பன உலக மானிடத்தின் விடுதலை ஆர்வம் கொண்ட அனைத்து மக்களின் அபிலாசைகளையும் ஒத்ததே.

தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் எவ்வித இடையூறுமின்றி சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். ஏனைய இன மக்களுடன் சமத்துவமாக வாழ விரும்புகிறார்கள். இயல்பாக நிம்மதியாக தங்கு தடையின்றி தமது சமூக பொருளாதார கலாச்சார வாழ்வை மேற்கொள்ள விரும்புகிறார்கள்.

உண்மையில் பௌத்த சிங்கள பேரினவாதம் காலனி ஆதிக்கத்தின் பின்னர் பதவி ஏற்றபின் தமிழர்களை இரண்டாந்தரப்பிரசைகளாக நடத்தியதாலேயே தமிழர் தமது எதிர்ப்பை அகிம்சை வழியிலும் பின்னர் வன்முறை வழியிலும் காண்பித்தார்கள்.

ஆனால் கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக புலிகள் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பவர்களாக முஸ்லீம்களின் உரிமைகளை மறுப்பவர்களாக உருவெடுத்தார்கள். எனவே தமிழர்களின் உள்ளும் ஜனநாயகத்திற்காக போராடவேண்டிய பணியையும் வரலாறு எம்முன் நிறுத்தியது.

நாம் ஈழத்திற்காப் போராடியவர்கள். அதுவும் சாதி வர்க்கமுரண்பாடுகள் களையப்பட்ட ஈழம். ஆனால் எமது பாதையில் புதிய சவால்கள் எழுந்தன. அது தான் போராட்டகாரர்களை தேடியழிக்கும் உள்ளிருந்தே கொல்லும் பயங்கரவாதம். உலகின் பண்பட்ட எந்த விடுதலைப் போராட்டத்திலும் காணப்படாத காட்சி இது.

ஆனால் இந்த அநாகரிகத்தை இந்த வக்கிரத்தை தமிழ் சமூகத்தில் ஒருபகுதியினர் தமது பிழைப்பிற்கான ஒரு வழி என்று வரிந்து கொண்டனர்.

இத்னால் புலி ஆதரவு ரேடியோக்கள் புலி ஆதரவு தொலைக்காட்சி மற்றும் ஊடகங்கள் வெளிநாடுகளில் இயங்கும் புலி ஆதரவு பள்ளிக் கூடங்கள் கோயில்கள் என்பனவும் வியாபாரப் பெருச்சாளிகளும் அந்த வகையினவே.

கோவில் தொடக்கம் தூள் வியாபாரம் வரை இங்கு விரவிக் காணப்படுகிறது. தமிழர்களின் ஏற்னவே சாதியத் தடிப்பேறிய சீரழிந்த வாழ்வு தற்போது பல புதிய சீரழிவுகளை எதிர் நோக்கி நிற்கிறது.

தமிழர்கள் என்ற ரீதயில் எதிர் நோக்கப்படும் ஒடுக்குமுறைகளில இருந்து பாதுகாக்க அதிகாரப்பகிர்வு எவ்வளவு அத்தியாவசியமோ அந்தளவிற்கு தமிழ் சமூகத்தினுள் நிலவும் சகல அடக்குமுறைகளும் களையப்படுவதும் ஜனநாயக வாழ்வு கட்டியெழுப்பப்படுவதும் அவசியமாகும்.

இன்று நாம் கூறும் இந்த விடயம் பலருக்கு சொல்வதற்கு அச்சம் தரும் வார்த்தைகளாக இருந்தாலும் அதுவே உண்மை. அதற்காக துணிந்து நிற்போம்.

மானிடத்தின் மேன்மைகளுக்காக போராடிய பாரம்பரியம் ஒன்று எமக்கு உண்டு.

தமிழக மக்களே உங்களில் சிலர் விளங்கிக் கொண்டிருப்பது போல் ஈழத்து நிலைமைகள் இருக்கின்றனவா என்பதை யதார்த்த சமகால நிலையில் ஆராய்வதும் எமது நோக்கம்.

புலிகள் சமாதானத்திற்கு தயாராக இருக்கிறார்கள் என்பது ஒன்று புலிகள் யுத்தநிறுத்தம் மேற்கொண்ட சமாதான கால கட்டம் என்று சொல்லப்படுகின்ற இவ்விரண்டு வருட காலத்தில் 80பேர்வரையில் மாற்று கட்சியினர் அல்லது புலிகளின் எதிரிகள் எனக் கருத்தப்படுபவர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள்,சமானிய அங்கத்தவர்கள் ஒதுங்கியிருந்தவர்கள் என்று நீண்ட பட்டியல் ஒன்றே இருக்கிறது.






இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. தமிழர்களை தமிழரே கொல்லும் படுகொலைக்கலாச்சாரத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் புலிகள்.

தமிழகத்தில் வெவ்வேறு கட்சிகள் செயற்படுகின்றன. அவற்றுக் கிடையே கொள்கை ரீதியாக ஒற்றுமைகள் வேற்றுமைகள் அபிப்பிராய பேதங்கள் இருக்கினறன. அதற்காக ஒருவரை ஒருவர் வெட்டிச்சாய்க்கும் போக்கு அங்கு காணப்படவில்லை.

இந்தியாவின் சுதந்திரபோராட்டக்காலத்திலிருந்தே வெவ்வேறு அபிப்பிராயங்கள் கண்ணோட்டத்தை கொண்டவர்கள் இணைந்தும் புரிந்தும் செயற்பட்டதை அவதானிக்கலாம்.

ஆனால் ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் போக்கை இந்திய மக்கள் சகித்துக் கொள்வதில்லை என்பதை தோழர் பத்மநாபா அவர்கள் சென்னையிலும் இந்தியாவின் இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூரிலும் படுகொலை செய்யப்பட்போது எழுந்த அதிர்ச்சி அலைகள் எமக்கு புலப்படுத்தின.

இன்றும் சில பாமரர்கள் காட்டுமிராண்டித்தனங்களை இந்திய மக்கள் மறந்து விடுவார்கள் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். இங்கு ஜனநாயகத்தை நடைமுறையில் அனுபவிக்கும். ஜனநாயக சுதந்திரத்தை நேசிக்கும் அரசியல்வாதிகள் சிலர் புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை உணர்ந்து கொள்ளாமல் இருப்பது எம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

ஈழத்தமிழர்களின் நிம்மதியான பாதுகாப்பான வாழ்விற்கு இந்தியாவின் தமிழக மக்களின் ஆதரவு தேவை. அவ்வாதரவு இந்தியாவை ஒத்த ஜனநாயக வாழ்விற்கானதாகவே அமைய வேண்டும்.

**மருணிக்கியன்**

www.padippakam.com





# யாழ் குடாநாட்டின் உண்மை நிலையை ஓரளவிற்கு வெளிக்கொண்டுவந்து விட்டது

யாழ் குடா நாட்டை 1996இல் இராணுவம் கைப்பற்றிய வேளையில் யாழ் குடா நாட்டில் புலிகளுக்கு ஆதரவளித்தவர்கள் என்ற பேரில் பலர் காணாமல் போயினர்.

சோதனைச்சாவடிகளும் தடைமுகாம்களும், தேடுதல்களும் அங்கு வாழ்ந்த மக்களை அச்சத்தில் ஆழ்த்தியிருந்தது.

1997 நடுப்பகுதியில் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய தமிழ் அரசியல் கட்சிகள் யாழ் குடாநாட்டில் அலுவலகங்களை அமைத்து செயற்படத்தொடங்கிய பின்னரே இக்கட்சிகளின் ஆதரவுடன் கைது செய்யப்பட்ட, காணாமற்போன தமது பிள்ளைகளை மீட்ப



தற்காகவும், தடை விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித்தொழிலை மீண்டும் ஆரம்பிக்கவும்,மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட இடங்களில் அந்த இடத்தின் அளவை, கால அளவை விஸ்தரிப்பதற்கும், இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் இருந்த மக்கள் படிப்படியாக இராணுவத்தினரின் பிடியிலிருந்த தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கும் கோரிக்கைகளை முன்வைத்ததுடன், பிரச்சினைகளை வெளிப்படுத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடாத்தினர். இதன்மூலம் ஓரளவிற்கு தமது நலன்களை பாதுகாத்துக்கொண்டனர்.

இரண்டு மாநகர மேயர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலரை புலிகள் படுகொலை செய்தபோதும் இயல்புநிலை, அபிவிருத்தி மேம்பாடடைந்து கொண்டிருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபோது குடாநாட்டின் சனத்தொகை 5 இலட்சத்தை தாண்டியிருந்தது.

புலிகள் ஒருதலைப்பட்சமாக செய்துகொண்ட யுத்தநிறுத்தம், அதனைத்தொடர்ந்து இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன குடாநாட்டிற்குள் புலிகளின் பிரவேசத்திற்கும் அவர்களின் செயற்பாடுகளுக்கும் வழியை திறந்து விட்டதுடன் யுத்த நெருக்கடிகளுக்குள் சிக்கி சின்னாபின்னப்பட்டுப்போயிருந்த யாழ குடாநாட்டு மக்கள் சிறிது நிம்மதியாக மூச்சுவிட வழிவகுத்தது.

வியாபாரத்துறை வளர்ச்சி கண்டது, சிறு முதலீடுகள் அதிகரித்ததுடன் புனரமைப்புப் பணிகளும் உத்வேகம் பெற்றது.

ஆனால், இந்த நிலை நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. நாளுக்கு நாள் நிலமை மாற்றமடைந்து மோசமாகி யுத்தகாலத்தை மிஞ்சும் அளவிற்கு மிரட்டல்கள், தாக்குதல்கள், கைதுகள், காணாமற் போதல்கள், படுகொலைகள், பலவந்த நிதிதிரட்டல்,



கட்டாய ஆட்சேர்ப்பு என்று நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இருந்த நிம்மதியையும் தொலைத்து விட்டோம் என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. யுத்தநிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன படையினருக்கு அனுகூலங்களை வழங்கியுள்ள அளவிற்கு மக்களுக்கு வழங்கவில்லை என்ற ஆதங்கம் நிலவுகிறது.

சமாதானச் சூழலில் வாழும் மன நிறைவு மக்கள் மத்தியில் இல்லை. இந்த நிலமை கூட நீடிக்குமா என்ற சந்தேகமும் இப்போது எழுந்துள்ளது.

புலிகள் யுத்தத்தை நிறுத்தி விட்டார்கள், சமாதான பேச்சுக்களில் ஈடுபட இணங்கியுள்ளார்கள், சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது மக்கள் அமைதியை நிம்மதியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் சமாதானத்தை குழப்ப நினைக்கும் சக்திகளே அமைதியை கெடுக்கிறார்கள் என்ற பிரமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாவித்து புலிகள் தமது அரசியல் எதிராளிகளையும். தனது கருத்துகள், நடவடிக்கைகளுடன் ஒத்துப்போக மறுக்கும் பொதுமக்களையும் மிரட்டியும், தாக்கியும், படுகொலை செய்தும் வருகிறார்கள்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இயல்பு நிலை திரும்பியிருக்கிறது என்ற தோற்றப்பாடு வியாபித்திருக்கின்ற அளவிற்கு நிலமைகளில் முன்னேற்றம் இல்லை.

இலங்கை அரசு தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க முன்வராததால் தொடர்ந்தும் இன்னல்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் புலிகளின் அடக்குமுறைகளுக்கும் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இரண்டு பக்கமும் அடிவாங்கும் மத்தளம் போன்று காணப்படுகிறார்கள்.

கலாச்சாரத்தை பாதுகாப்பது என்ற பேரில் குடாநாட்டு மக்கள் மீது தமது மேலாண்மையை செலுத்துவ



தையும் ஏகபிரதிநிதிகள் என்ற அந்தஸ்த்தை பேணுவதற்காக மேற்கொண்டுவரும் படுகொலைகள், தாக்குதல்கள், மிரட்டல்களும் புறக்கணிக்கக்கூடியவை அல்ல.

இந்த படுகொலைகள் தாக்குதல்களுக்கு இலக்காகுபவர்கள் புலிகளின் அரசியல் எதிராளிகள் மாத்திரமல்ல சாதாரண பொது மக்களும் கூட இவற்றிற்கு இரையாகிவருகின்றனர்.

புலிகள் நீண்ட காலமாக தமது கருத்துக்கு இணங்க மறுப்பவர்களை அழித்தொழித்து வந்தபோதும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சனை தீர்வுக்கான சமாதான முயற்சிகளை மேற்கொள்வதென்ற பேரில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் அரசியல் வேலைகளில் ஈடுபடப்போகிறோம் என்று கூறிக்கொண்டு பகிரங்கமாக செயற்படத் தொடங்கிய புலிகள் இதர அரசியல் கட்சிகளின் நட வடிக்கைகளை தடுக்கும் நோக்கில் படுகொலைகளையும், தாக்குதல்களையும் மேற்கொள்வதும், தமது இராணுவ,புலனாய்வு நவடிக்கைகள் மூலம் தமது கருத்துக்கு இணங்க மறுப்பவர்களை பழிவாங்குவது, தண்டிப்பதுடன் இந்த நடவடிக்கைகள் மூலம் ஏனையோரையும் அச்சுறுத்தி பணியவைக்கும் நோக்கில் குரூரமான தண்டனைகளை வழங்கி வருகின்றனர்.

இலங்கை அரசுடன் சமாதான பேச்சுக்களை முன்னெடுக்கும் நோக்கில் நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் 2002 பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் அவர்களின் இந்த நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதை காணலாம். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் வடக்கு கிழக்கில் மாத்திரம் சுமார் 80க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டதாக குறிப்பாக தமிழ் ஊடகங்கள் தெரிவித்து வந்தபோதும் சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்துப் பார்த்தால் அனேகமான படுகொலைகளுடன் புலிகளுக்குத் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது.

1997 இலிருந்து வடபகுதியில் செயற்படத் தொடங்கிய தமிழ் அரசியல் கட்சிக் காரியாலயங்களுக்கு 2003 யூன் 14இல் தோழர் சுபத்திரன் கொல்லப்படும் வரை அரச படைகளின் பாதுகாப்பு கோரப்படவுமில்லை, வழங்கப்படவுமில்லை.

ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற தோழர் சுபத்திரனின் படுகொலையின் பின்னரே குடாநாட்டில் உள்ள தமிழ் அரசியல் கட்சி அலுவலகங்களுக்கு இராணுவத்தினரதும், பொலிஸாரதும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுமாத்திரமல்ல இவ்வருட தொடக்கத்தில் நடந்து முடிந்த பாராளுமன்றத்தேர்தலின் போது நடந்து முடிந்த சம்பவங்கள் வடக்கு கிழக்கின் குறிப்பாக யாழ் குடாநாட்டின் உண்மை நிலையை ஓரளவிற்கு வெளிக்கொண்டுவந்து விடடது என்று தான் சொல்ல வேண்டும்.

புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று ஜனநாயக முறைப்படி மக்களின் ஆணையை கோரி நின்ற அந்த தேர்தலில் மற்றெந்த அரசியல் கட்சியும் தமது பிரச்சாரப்பணிகளுக்கு ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி தானும் பயன்படுத்த முடியவில்லை, எந்த ஒரு அரசியல் கட்சியும் தமது பிரச்சாரப்பணிகளுக்காக ஒலிபெருக்கிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஒலிபெருக்கிகளை வைத்திருப்பவர்கள் வாகனங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை தமிழ் அரசியல் கட்சிகளின் பாவனைக்கு கொடுக்காதத்குக் காரணம் அவர்களது அரசியல் நிலைப்பாடல்ல புலிகளின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக வேண்டிவரும் என்ற அச்சம் காரணமாகவே அவற்றைக் கொடுக்கவில்லை. வருமானத்தை இழந்தாலும் பரவாயில்லை புலிகளிடம் வதை படமுடியாதென்ற காரணத்தினாலேயே தவிர்த்துக்கொண்டார்கள்.

தேர்தல் காலங்களிலேயே சிறிது சம்பாதிக்க முடியும் என்ற ஆசையையும் அடக்கிக்கொண்டு ஒதுங்கிக்கொண்டார்கள். மாற்று தமிழ் அரசியல் கட்சிகள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை என்பது மாத்திரமல்ல சாதாரண மக்களும் சுதந்திரமாக இயங்க முடியாத, சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்பதையே இது காட்டுகிறது.

இந்த அடிப்படை மனித உரிமை மீறலை வடக்கு கிழக்கில் எந்த மனித உரிமை அமைப்பு கண்டிக்க முன்வந்திருக்கிறது எந்த பத்திரிகை இந்தச் செயலுக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறது?

## அரசியல் கட்சிகள்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகங்கள் யாழ் குடாநாட்டில் இருக்ககூடாது 2002டிசம்பர் 30ம் திகதிக்குள் அவற்றை மூடிவிட வேண்டும் என எச்சரிக்கை விடப்பட்டது. இதற்காக பொதுமக்கள் என்ற பேரில் தமக்கு சார்பானவர்களை அலுவலகங்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டது. இந்த கட்சிகளின் உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டாம் என பொதுமக்கள் திரும்பத் திரும்ப எச்சரிக்கப்பட்டார்கள். இக்கட்சிகளின் அங்கத்தவர்கள் அக்கட்சிகளை விட்டு விலகுமாறு கேட்கப்பட்டார்கள். அதனை ஏற்காத பலர் மிரட்டப்பட்டார்கள். அவர்களின் பெற்றோர் குடும்ப அங்கத்தவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். சமாதான முன்னெடுப்புக்களுக்கு மத்தியில் இன்றும் இந்த நிலை தொடர்ந்தவண்ணமே உள்ளது.

## பொது அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள்

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் ஒருவரை பிரதம விருந்தினராக அழைக்காமல் எந்த பொது அமைப்பும் தமது அமைப்பின் கூட்டத்தை நடாத்தியதாக தெரியவில்லை. அனேகமான பொது அமைப்புக்கள் புலிகளின் முன்னணி அமைப்புகளாகவே செயற்பட்டு புலிகள் நடாத்தும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு தமது அங்கத்தவர்களை அழைத்து செல்வதிலிருந்து விலக முடியாதவர்களாகவே உள்ளார்கள்.

யாழ் குடாநாட்டிலுள்ள தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து வருடந்தோறும் மேதின கூட்டங்களை நடாத்திவந்த தொழிற்சங்கக் கூட்டுக்குழு தொழிலாளர்கள் தினமான மேதினத்தை கொண்டாடுவதையே நிறுத்திவிட்டார்கள்.

இம்முறை யாழ்நகரில் புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்திற்கு புலிகளின் ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் வந்தவர்கள் இயக்கப் பாடலகளை ஒலிபரப்பி அந்த கூட்டம் குறித்த தமது வெறுப்பை விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள்.



முற்போக்கு சிந்தனையுள்ள தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள், தனிநபர்கள், எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்து நடாத்த முனைந்த மேதினக் கூட்டம் அதற்கான இடவசதியை வழங்கியவர்களை அச்சுறுத்தி தடுக்கப்பட்டது.

தாங்கள் நடாத்தும் மேதின நிகழ்வுகளில் அனைவரும் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்பதே புலிகளின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு தான் புலிகள் தமிழ் மக்கள் அனைவரும் தம் பின்னால் அணிதிரண்டிருப்பதாக காட்ட முனைகிறார்கள்.

எனவே எந்த பொது அமைப்பும் புலிகளின் நிகழ்ச்சி நிரலின்படியே செயற்பட முடியும். சுதந்திரமாக செயற்பட எண்ணுபவர்கள் புலிகளின் சாம,பேத,தான, தண்டங்களை சந்திக்க நேரிடும்.

அண்மையில் கரும்புலிகள் நினைவு நளையொட்டி யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட அழைப்பிதழ் ஒன்று சங்கங்களின், அதன் அங்கத்தவர்களின் இக்கடடான நிலையை வெளிப்



படுத்துவதாயுள்ளது.

அன்பான அங்கத்தவர்களே,

கரும்புலிகள் நாளை முன்னிட்டு 05.07.2004 அன்றைய தினம் முழு நாளும் சிகை ஒப்பனை நிலையங்கள் மூடப்பட்டு பகல் ஒரு மணிக்கு முன்னர் உரிமையாளர், தொழிலாளர் அனைவரையும் சங்கப் பணிமனைக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இரண்டு மணிக்கு வடமராட்சி கரும்புலிகள் நினைவாலயத்திற்கு அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பங்குபற்றாதோர் மீது சங்க சட்டக்கோவைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இந்த நிலையில் சங்கங்கள் எவ்வாறு சுதந்திரமாகச் செயற்படமுடியும். இவ்வாறு தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் நலன் சார்ந்த நடவடிக்கைகளிலிருந்து திசை திருப்பப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படை நோக்கங்கள் சிதைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சங்கம் ஒன்றின் உறுப்பினர் தனக்கு பிடித்தமான ஒரு அரசியல் கருத்தை பின்பற்றலாம் என்ற தொழிலாளர்களின் உரிமை நிராகரிக்கப்படுகிறது.

## பத்திரிகைகள்

பிரகடனப்படுத்தப்படாத ஒரு தணிக்கை முறையை பத்திரிகைகள் பின்பற்றிவருகின்றன.

வடக்கு கிழக்கில் பத்திரிகைகளினதும், பத்திரிகையாளர்களதும் நிலை பற்றி பத்திரிகையாளர் ஒருவரே கூறுகிறார்.

**ஆதவன்**

"அங்கே வாழும் எழுத்தாளர்களுக்குப் புலி கொடுக்கும் நெருக்கவாரம் கொஞ்சநஞ்சமல்ல.

ஆயுதப் படைகளாலும் அவர்களுக்கு நெருக்கடி. பெரிய மிரட்டல் புலியாற்தான் வருகிறது.

இலங்கையிலுள்ள எல்லாத் தமிழ பத்திரிகைகளுமே புலிசார்பாகவே எழுதவேண்டும். தமிழ் ஊடகங்களின விற்பனைச் சந்தை தமிழ் தேசியவாதமாக இருப்பதால் புலியைப்பற்றிய செய்திகளின் தன்மைகள் மாறிவிட்டன."

எமது விடுதலைப்போராட்டம் இன்னும் முடிவடையவில்லை ஆகவே தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற புலிகளை விமர்சிக்கக் கூடாது. அவ்வாறு விமர்சிப்பது அரசுக்கு சார்பான நடவடிக்கை ஆகவே புலிகள் இழைக்கும் தவறுகளை பெரிது படுத்தக்கூடாது என்ற விசித்திரமான ஒரு வாதத்தை புலிகளின் பிரச்சாரகர்களும் புலிகள் சார்பு நிலைப

தொடர்ச்சி 04ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# உணர்வு, அதன் தோற்றுவாயும் சாராம்சமும்

உணர்வு, அதன் தோற்றுவாயும் சாராசம்சமும்

மார்க்சிய- லெனினியத் தத்துவஞானத்தில் உணர்வு பற்றிய கருத்து பருப்பொருளைப் பற்றிய கருதுகோளைப் போலவே முக்கியமானதாகும்.

உணர்வு, அதன் தோற்றுவாய், சாராம்சம் ஆகிய பிரசசினைகளின் மீதே எல்லாத் தத்துவஞான அமைப்புக்களும் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

பருப்பொருள் பற்றிய பிரச்சினையைப் போலவே இந்தப் பிரச்சினையின் எதிர்மறையான தீர்வு ஒரு தத்துவம் பொருள்முதல்வாதமா அல்லது கருத்துமுதல்வாதமா என்று முடிவு செய்வதற்கு முக்கியமான அளவுகோலாக இருக்கிறது.

## உணர்வைப் பற்றி மார்க்சியத்துக்கு முந்திய கருதுகோள்கள

உணர்வின் தோற்றத்தையும் சாராம்சத்தையும் பற்றிய பிரச்சினை மிகவும் சிக்கலான ஒன்றாகும். மனிதர்கள் பழங்காலந்தொட்டே இதில் ஆர்வம் காட்டி வந்துள்ளனர். தங்களுடைய வாழ்க்கையில் உணர்வின், மனித அறிவின் முக்கியத்துவத்தை அவர்கள அறிந்திருந்தார்கள்.

மனிதன் தன்னுடைய உணர்வின் மூலமாகவே சம்பவங்களையும் மற்ற மனிதர்களையும் மதிப்பீடு செய்கிறான். உலகத்தின் அழகையும் கடந்த தலைமுறையினர் திரட்டியுள்ள அறிவையும் போற்றிப் புகழ்கிறான். முற்போக்கான கருத்துக்களை கிரகித்துக் கொண்டு, சமூக நீதி நிலவுகின்ற சமுதாயத்துக்காகப் போராடுகிறான்.

மனித குலச் சிந்தனை தன்னுடைய இயல்பைப் புரிந்து கொள்வதற்கு முன்னால் ஒரு நீண்ட, முரண்பாடான வளர்ச்சிப் பாதையில் பிரயாணம் செய்து வந்திருக்கிறது.

பண்டைக்காலத் தத்துவஞானிகள் "உணர்வு" என்ற கருத்துக்குப் பதிலாக "ஆன்மா" என்ற கருத்தையே அதிகமாகப் பயன்படுத்தினார்கள். ஆன்மா என்பது மனிதனுடைய மொத்த உளவியல் திறமைகள், பார்த்தல், கேட்டல், சிந்தித்தல், உணர்தல், மற்றும் இதர திறமைகள் என்று அவர்கள் கருதினார்கள்.

ஆன்மா என்பது இயற்கையான காரணங்களால் படைக்கப்பட்டிருக்கின்ற பொருளாதார வஸ்து என்று பொருள்முதல்வாதிகள் கருதினார்கள். அது இயற்கைக்கு மேலான சாரப்பொருள், தற்காலிகமாக மனிதனுடைய உடம்பில் குடியிருப்பது என்று கருத்துமுதல்வாதிகள் கருதினார்கள்.

சமூகத்தில் மதம் தனது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்ட பிறகு மனித உணர்வு தெய்வீகமான தோற்றுவாயைக் கொண்டது என்று பெருமளவில் கருதப்பட்டது.

ஆன்மாவையும் உணர்வையும் பற்றிய மதக்கோட்பாடுகள் காலப்போக்கில் அனேகமாக மாறவில்லை. கருத்துமுதல்வாதக் கருதுகோள்களைப் பொறுத்தமட்டில் அவை அகநிலையானவை, புறநிலையானவை என்று இரு கிளைகளாகப் பிரிந்தன.

அகநிலைக்கருத்து முதல்வாதிகள் மனித அறிவை- யதார்த்தமான முழு உலகத்தையும் கூட- தனிப்பட்ட மனித உணர்வுக்குள் அடைப்பதற்கு முற்பட்டார்கள்.

புறநிலைக் கருத்துமுதல்வாதிகள் உணர்வைத் தனி மனிதனிடமிருந்தும் மனிதகுலத்திலிருந்தும் பிரித்து, அதைப் படைத்த நிலைமைகளிலிருந்தும் பிரித்து அதை தெய்வீக நிலைக்கு உயர்த்தினார்கள்.

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்த பொழுது உணர்வைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்துக்களும் வளர்ச்சி அடைந்தன. பொருள்முதல்வாதச் சிந்தனையின் பல்வேறு மரபுகள் மனித உணர்வின் தோற்றத்தையும் இயல்பையும் பற்றி வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டன.

உணர்வு என்பது கருத்தியலானது, ஆன்மீக நிகழ்வு என்று சிலர் கருதினார்கள். மற்றவர்கள் அதைப் பொருளாயத நிகழ்வு என்று கருதினார்கள். உணர்வின் கருத்தியல் அல்லது ஆன்மீகம் என்பதற்குத் தாங்கள் தருகின்ற பொருள் என்ன என்பதை முன்னவர்களால் விளக்க முடியவில்லை: கொச்சையான பொருள்முதல்வாதிகள் என்று கருதப்பட்ட பின்னவர்கள் கல்லீரல் பித்த நீரைச் சுரப்பதைப் போல மூளை சிந்தனையைச் சுரக்கிறது என்று கருதினார்கள்.

மூளையின் ஒரு செயல் என்று உணர்வைக் கருதியபோதிலும் அதன் இயல்பை அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை.

## தியாகிகள் தினத்தில் ரி.பி.சி வானொலியிலிருந்து ஒலிபரப்பப்பட்ட கவிதைத் தொகுதிகள்.

### தாயவள் துடிக்கிறாள் தரணியெங்கும் கேட்கிறது அவள் ஓலம்

ஐயகோ! ஐயகோ!
மாற்றுக்கருத்துக் கொண்டதற்காய்
மரணித்த என் செல்வங்களே
மக்களின் மனதில்
நீங்கா இடம் பிடித்த மா மனிதர்களே
உங்கள் மரணம் முடிவல்ல
சமுதாயத்தின் விடியல்

சமுதாயமே சிந்தித்துப்பார்
எம் கண்மணிகளை கொன்றார்கள்
கேட்டதற்கு துரோகிகள் என்றார்கள்
இன்று புலிகள் செய்வது என்ன?
சிங்கள ஆட்சியுடன் கை குலுக்கவில்லையா?
இந்தியாவுடன் நட்புறவாட துடிக்கவில்லையா?
மாகாண ஆட்சியை வெறுத்தாய்
பதினேழு வருடங்களின் பின்
அதிலும் கேவலமாக இடைக்கால சுயாட்சியை கேட்கவில்லையா?
மனச்சாட்சி உள்ளவர்களே கேளுங்கள்
இதையே மாற்றுக்கட்சிகள் செய்தால் துரோகம்
புலிகள் செய்தால் தியாகமாம்
அதற்கு புலிகளின் அகராதியில்
இராணுவத் தந்திரோபாயம் என்று பெயராம்.

உன் மனதை தொட்டுக் கூறு
நீ கேட்பது தமிழ் சமுதாயத்திற்கு விடிவா?
அன்றேல் உன் தலைக்கு ஒரு முடியா?

தியாகிகளே தலைநிமிர்ந்து நில்லுங்கள்
கொண்ட கொள்கையில் உறுதியாய்
மனித நேயத்தில் பற்றாய்
பதவி ஆசை அற்றவர்களாக
சகோதர படுகொலையை வெறுப்பவர்களாக
போர்க்களம் புகுந்த பெண்களை கொச்சைப்படுத்தாதவர்களாக
பிரதேச வாதத்தை தூண்டாதவர்களாக

ஐயகோ! ஐயகோ!
அன்னை மரியும் அழுகிறாள் கேளீர்
மண்ணுலக மக்களின் மீட்சிக்காய்
தன்னுயிரை மாய்த்த மனிதனாம் ஏசுநாதர்
என் பிள்ளையை ஒப்பிடுகிறார்கள்
தினமும் தலை கொய்யும் புலிகளின் தலைவனுக்கு
நான் பெறா பிள்ளையவன் பத்மநாபாவை
என்மகனுக்கு ஒப்பிட்டிருந்தால்
மனச்சாட்சி அடைந்திருப்பேன்
என்பிள்ளை யேசு மறுபடியும் பிறந்துவிட்டான்
பத்மநாபா உருவில் என்றிருந்தேன்
பறித்து விட்டானே பாவி யூதாஸ் கொடியோன்.

## யாழ் குடாநாட்டின் உண்மை நிலையை ஊரறிவதற்கு........

05ம் பக்கத் தொடர்ச்சி

பாடுகொண்ட ஊடகவியலாளர்களும் தெரிவித்து வருகின்றனர்.

இதனை பெரிதுபடுத்தக் கூடாது என இதன் பாதிப்புக்களை அனுபவித்தறியாதவர்கள் கூறலாம். "தகுதற்பொருட்டன்று மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" அனேக மானவர்கள் இந்த பாதிப்புக்களிலிருந்து தப்பிக்கொள்வதற்காகவே சாப்பு நிலையில் நின்று தம்மை மெய்ப்பிப்பதற்காக இதனை கூறிவருகிறார்கள்.

ஆனால், அடிப்படையில் இது இயக்கவியல் தத்துவத்திற்கே முரண்பாடானதாகும். போராட்டத்தின் போக்கில் தவறுகள் நேர்ந்துவிடுவதும் அவைதிருத்திக் கொள்ளப்படுவதும் புதுமையான விடயமில்லை.

தவறான வழியில் செல்பவனை கண்டித்து நெறிப்படுத்துபவன்தான் உண்மையான நண்பன் என்று கூறுகிறார் வள்ளுவர்.

புலிகளின் கருத்துக்களுடன் உடன்படுபவர்கள் மட்டுமே தமிழ் சமூகத்தின் மீது அக்கறை உள்ளவர்கள் என்றும். புலிகளின் கருத்துக்கள நடைமுறைகளுடன் உடன்பட மறுப்பவர்கள் தமிழ் சமூகத்தின் விரோதிகள் என்ற புலிகளின் தவறான கருத்தும். அதன்படியான செயற்பாடுகளையும் மிஞ்சி தமிழ் சமூகத்திற்கு வேறு யாரும் கேடுவிளைவித்து விட முடியாது.

சிலர் தமது சொந்த நலன்களுக்காக, சுயலாபங்களுக்காக புலிகளின் இந்த செயற்பாடுகளை நியாயப் படுத்தி வருகிறார்கள். இவர்களின் இந்த போக்கு மக்களுக்கும், போராட்டத்திற்கும், இறுதியில் நியாயப் படுத்தும் நபர்களுக்கும் கேடாகவே முடியும்.

யாழ் மாநகர மேயர் துரையப்பா படுகொலையை நியாயப்படுத்தியவர்களை அதே துப்பாக்கி பலியெடுத்தது வரலாறு 1990இல் மாற்றுக் கட்சிகளை சேர்ந்தவர்கள் பலவந்தமாக நாடுகடத்தப்பட்ட போது அதுவும் விடுதலைப்போராட்டத்தின் தேவை என்று கருதி மௌனமாயிருந்தோம்.

முஸ்லிம் சமூகமே தலைக்கு 500ரூபா மட்டும் எடுத்துச் செல்லுமாறு கூறி வடமாகாணத்திலிருந்தே துரத்தப்பட்டார்கள். அந்த நேரத்தில் அதனை தவறென்று எடுத்துரைக்க தடுக்க முயலாததால், முடியாததால் யாழ் குடாநாட்டு மக்கள் அனைவருமே வன்னிக்கு துரத்தப்பட்ட துயரத்தை சந்தித்தோம்.

அன்று உங்கள் வீடுகளுக்கு வந்த இயக்க உறுப்பினர்கள் உங்களால் முடிந்தஅளவு பண உதவி செய்யுமாறு மன்றாடினார்கள். இயலாதபோது இல்லை என்று திருப்பியும் அனுப்பினீர்கள் ஆனால் இன்று வருவாய்துறை அலுவலகங்களில் கூனிக்குறுகி நின்று ஒரு ஆயிரத்தை குறைக்க மாட்டீர்களா தம்பி என்று மன்றாடும் நிலைக்கு மக்களாகிய நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் போராட்டமானது 20வருடங்களுக்கு முன்னர் அமைப்புக்களிடையே நிலவிய ஒற்றுமையின் பலத்திலும், இந்திய மக்களின், இந்திய அரசின் பங்களிப்பின் பலத்திலும், உலக நாடுகளின் ஆதரவு என்ற பலத்திலும், எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் ஏகோபித்த கள்ளங்கபடமற்ற ஆதரவு, பங்கேற்பு என்ற பலத்திலும் உயர்ந்து நின்றது.

இலங்கை அரசின் தாக்குதல்கள், அடக்குமுறைகள் உட்பட பல வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த போதும் மக்கள் சுயமாக சிந்தித்து செயற்படும் சுதந்திரத்தோடு, கருத்துக்களை அச்சமின்றித் தெரிவிக்கும். வல்லமையோடும், நிமிர்ந்தகோடும்., தலைநிமிர்ந்து நின்றார்கள்.

இவற்றையெல்லாம் பாழ்படுத்தியவர்கள் புலிகளும், அவ்வப் போது அவர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு வக்காலத்து வாங்கியவர்களுமே. இப்போது அவர்கள் அன்று போராட்டம் பல வீனமான நிலையில் இருந்தது போலவும் இன்று அரசுடன் பேரம் பேசக்கூடிய வலுவான நிலையிலும், இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலமாக இருப்பதாகவும் கூறிக்கொண்ட போதும் மக்களின் நிலை கவலைக்கிடமானதாகவே இருக்கிறது. அன்றைய நிலையுடன் ஒப்பு நோக்கினால் மக்கள் பலமடங்கு அதிகரித்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஆக இவர்கள் கூறுவது போல போராட்டம் வெற்றி பெற்றுவிட்டால் மாத்திரம் இந்த வன்முறைகளும், ஜனநாயக மறுப்புக்களும் ஆதவனைக் கண்ட பனிபோல விலகிவிடப் போவதில்லை. இப்போது நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விடக்கூடாது என்று கூறி அனைத்து ஜனநாயக விரோதப் போக்குகளையும் நியாயப்படுத்தி வருவது போன்றே அடைந்த வெற்றிகளை பாதுகாக்க வேண்டும் என்று கூறி அப்போதும் நியாயப்படுத்த வேண்டியிருக்கும்.

நியாயமான போராட்டமானது அது ஆயுதப்போராட்டமாயினும் கூட சொந்த மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பதாக எக்காலத்திலும் இருக்க முடியாது. மக்களின் துன்பங்களை, பிரச்சினைகளை மனிதாபிமான முகத்துடன் அணுகமுடியாதவர்கள் அவர்களின் பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்தமாகத் தீர்வுகாணப் போராடுவதாகக்கூறுவது தர்க்கப் பொருத்தமற்றதாகும். ●

## சேரனின் ஓட்டோகிராப்

அண்மையில் வெளிவந்த சேரனின் ஓட்டோகிராப் கடந்து போன பசுமையும் வரண்டதுமான காலத்தை ஞாபகம் செய்கிறது. ஒவ்வொரு சராசரி மனிதனின் வாழ்விலும் அத்தகைய காலங்கள் இருந்திருக்கும். இந்தப்பயணத்தில் வாழ்க்கையின் வெற்றிப்பாதையிலும் துயரப்பாதையிலும் போவதை மனிதாபிமானக் கண்கொண்டு அணுகுகிறார்.

சேரன் பொற்காலம் உட்பட வேறுசில நல்லபடங்களையும் இயக்கியிருக்கிறார். ●

### எங்கள் நேசமான தோழனே பத்மநாபாவே

சகதோழர்களே
மக்களின் விடுதலையை நேசித்து
அதனையே சுவாசித்து
வாசம் செய்தவர்கள் நீங்கள்
மானிடத்தின் விடுதலைக்காய்
மகத்தான கருத்துக்களை
மக்களிடம் விதைத்தவர்கள்
தேச விடுதலையுடன்
வர்க்க விடுதலையும் என
வரையறை செய்தவர்கள்
தோழர் நாபாவே நீ வெறும் குறுந்தேசிய வாதியல்ல
சர்வதேசியவாதி
உலகத்தில் ஒடுக்கப்படும் மக்களுக்காய்
ஓங்கிக் குரல் கொடுத்தவன் நீ
உன் நெஞ்சில் வீரம் மட்டுமல்ல ஈரமும் நிறைந்திருந்தது.

மலையக மக்களையும் மனதார நேசித்தவன் நீ
அந்த மலை முகடுகளில் உன் பாதச்சுவடுகளின் பதிவுகள் இன்னமும்
இஸ்லாமிய மக்களையும் இதயத்தால் நேசித்தவன்
அவர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் உயர்த்தி நிறுத்தியவன்
கல்லுடைக்கும் தொழிலாளர்களுடன் உன் கரங்களையும் இணைத்தவன்
பிற்போக்கு கருத்துக்களையும் உடைத்து
மனித குலத்தின் சிவக்கும் விடியலுக்காய் கருத்தையும் விதைத்தவன் நீ

நல்ல தோழனாய்
நல்ல நண்பனாய்
நல்ல தகப்பனாய்
நல்ல அண்ணனாய்
நல்ல உறவினனாய்
எப்போதுமே அணைத்து நின்றாய்
உன் தோழர்களை

உன் கண்களின் பிரகாசத்தில் சூரியனை காணலாம்
உன்னுடன் பேசும் போது சூரியனுடன் பேசுவதாய் மனங்கள் உணரும்
உன் தோழர்களுக்கு கருவிகளை மட்டும் கொடுத்தவன் அல்ல
நீ முதலில் கொடுத்ததெல்லாம் மனித வாழ்வின் மகத்தான சிந்தனைகள்
உன் நிமிர்ந்த நடையை போலவே
உன் நியாயங்களும் எப்போதும் எழுந்தே நிற்கும்
விருந்த மக்களுக்காய்
நீ தலைமையை தட்டிப்பறித்தவனல்ல
தோழமையோடு தெரிவு செய்யப்பட்டவன்
அது தேசமே உனக்குத் தந்தது நேசமாக

எதிரி யார் நண்பன் யார் என்று தெரியாத துப்பாக்கிகளுக்கு
இரையாகிப்போன
எங்கள் தோழர்களே
உண்மையின் கரங்கள் ஒருநாள் உயரும்.

படிப்பகம்

www.padippakam.com



# புகைப்படக்கண்காட்சி



கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற புகைப்படக்கண்காட்சியில் பதகிரிகைத் துறை சார்ந்த நான்கு புகைப்படப்பிடிப்பாளர்களின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

யுத்தம் காரணமாக தமிழ் மக்களும், சிங்கள மககளும் சந்தித்த இழப்புக்களையும் குண்டுத்தாக்குதல்களால் நேர்ந்த அழிவுகள், அதன் குரூரம் மனிதாபிமானமற்ற எல்லைப்புற மக்களின் படுகொலைகள் என்பவற்றின் மூலம் யுத்தத்தின் அவலங்கள் படம்பிடித்துக்காட்டப்பட்டிருந்தன.

ஆனையிறவு தாக்குதலில் கொல்லப்பட்ட படைவீரர்களின் தலைக்கவசம், சிதைவடைந்த அங்கிகள் எலும்புகள் என்பன கடல் ஏரியின் கரையில் சிதறிக் கிடப்பது அந்த சண்டை தொடர்பான ஒரு கதையை கூறுவதாயுள்ளது.

இடப்பெயர்வின் போது காரிலும், எல்லைப்புறக் கிராமம் ஒன்றில் வீட்டின் உள்ளே சுவாமிப் படத்திற்கு கீழே எரிக்கப்பட்டு கருகிப்போயிருக்கும் சடலங்கள் அதனை வீட்டின் வாசலில் நின்று பார்க்கும் சோகமும், அச்சமும் கலந்த அயலவர்கள், தாயுடன் சேர்த்து வெட்டிக்கொல்லப்பட்டிருக்கும் குழந்தை, இராணுவத் தலைமையகம் மீதான தாக்குதல நடந்தவுடன் நெஞ்சுக்கு கீழே தசைகள் மட்டும் தொங்க காயமின்றி முகத்துடன் முழுமையாக உள்ள மேற்பகுதியை நான்கு பேர் சுமந்துவரும் காட்சி, உழ்வு இயந்திரத்திலும் மூட்டை முடிச்சுக்களுடன் அடையப்பட்டுச் செல்லும் மக்கள் அனைத்தும் அற்புதமான படப்பிடிப்புக்கள்.

ஆனாலும், இந்த கமரா கண்களுக்குத் தெரியாத ஒரு சோகம் வடக்கு கிழக்கில் உண்டு. அது இந்த புகைப்படப்பிடிப்பாளர்களாலும் கண்டுகொள்ளப்படவில்லை.

யுத்தத்தில் தனது மகனை பறிகொடுத்த தாய் அவன் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை பிரமாண்டமான, அழகுபடுத்தப்பட்ட மயானத்தில் அடையாளம் கண்டு தனது மகனுக்காக கண்ணீர் சிந்துகிறாள். தனது மகனுக்கான ஒரு நினைவிடத்தில் அவனுக்கு அஞ்சலி செய்யும் அளவிற்கு கொடுத்து வைத்த ஒரு தாயையே இந்த கமராக்களுக்கும் தெரிந்திருக்கிறது.

புகைப்படப்பிடிப்பாளர்களுக்கும் தெரிந்திருக்கிறதே தவிர இந்த போராட்டத்தில் தனது தந்தையை, தாயை, மகனை, மகளை, சகோதரனை, சகோதரியை பறிகொடுத்துவிட்டு அவர்கள் எங்கே புதைக்கப்பட்டார்கள் என்பதே தெரியாமல் அவர்களுக்காக வெளிப்படையாக அழக்கூட முடியாத ஒரு பரம்பரையின் அவலம், சோகம் இந்த கமராக் கணகளுக்கும புலப்படவில்லை.

இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையேயான மோதல்களின விளைவுகளையே இந்த புகைப் படங்களில் பெரும்பாலானவை கருப்பொருளாக்கியுள்ளது.

ஆனால், இராணுவம் புலிகள் மோதல்களினால் விளைந்த உயிரழிவுகளை விடவும் புலிகள் இதர அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள், மாற்றுக்கருத்துக் கொண்டவர்களுக்கு எதிராகத் தொடுத்த குரூரத்தனமான தாக்குதல்களினால் ஏற்படுத்தப்பட்ட உயிர்ச்சேதம் குறைந்தளவானதில்லை. மாற்றுக்கருத்துடையவர்கள், அவர்களுக்கு ஆதரவு நல்கியவர்கள் மீது ஏவிவிடப்பட்ட சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் சாதாரணமானதில்லை.

ஆனால், இவை இன்று அனேகமான ஊடகங்களிலும், பெரும்பாலான கலைப் படைப்புக்களிலும் இடம்பெறத் தவறியதை போலவே இந்த புகைப்படக் கண்காட்சியிலும் அதன் சுவடே தெரியாதது குறைபாடாகும்.

## யுத்த கால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.

ஒரு சிறிய குருவியினுடையதைப்
போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதி
தோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற் சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து
வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச்
சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைக் கதைகளின்
அர்த்தத்தை
இல்லாதொழித்தது.

சிவரமணி

## தீராநதியில்:- இலங்கை எழுத்தாளரின் நேர்காணலில் இருந்து....

கடந்த 10வருடங்களாக பிரான்ஸில் அகதியாக வாழ்ந்து வருபவரும் இளைதலைமுறை எழுத்தாளர்களில் முக்கியமானவரும் “கொரில்லா” “தேசத்துரோகி” ஆகிய இருபடைப்புக்களை தந்தவருமான ஷோபாசக்தி சென்னையிலிருந்து வெளியாகும் “தீராநதி” சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலின் ஒருபகுதி:-

தீராநதி: ஈழத்திலிருந்து ஓர் அகதியாக வெளியேறுவதற்கு முன்புவரைக்குமான உங்கள் வாழ்க்கை, அரசியல் ஈடுபாடுகள் குறித்து சொல்ல முடியுமா?

ஷோபாசக்தி: உங்களது இந்தக் கேள்விக்குத் தெளிவான ஒரு பதிலைச் சொல்ல முடியாத நிலையில் இப்போதைக்கு நான் இருக்கிறேன். உள்ளதை உள்ளபடி சொல்வதற்கு ஏற்றதான ஒரு சனநாயகச் சூழல் எங்களுக்கு இல்லை. ஈழத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த நாடுகளிலும்கூட என் போன்றவர்களுக்குக் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. சொல்வதனாலும் எழுதுவதனாலும் கொல்லப்படக் கூடிய ஒரு சூழலில் நாங்கள் வாழ்கிறோம்.

தீராநதி: ஒரு எழுத்தாளராக நீங்கள் உருவாக, உங்கள் இளமைப்பருவச் சூழலில் எது காரணமாக இருந்திருக்க முடியும் என்பது பற்றியாவது சொல்ல முடியுமா?

ஷோபாசக்தி: விசேடமாக எதுவும் இல்லை. ஒரு தீவுப் பகுதியின் வறிய கிராமத்தில் நான் பிறந்தேன். பத்தாவது வகுப்பு வரைக்கும் கல்வி கற்றேன். அப்புறம் இயக்கத்துக்குப் போய்விட்டேன். இந்த இடத்தில் என் கதையை நிறுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தில் நான் இருக்கிறேன். அதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு வேறுவழி இல்லை.

என்னுடைய இருபத்தோராவது வயதில் நான ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறினேன். இப்போது எனக்கு 36வயது. கடந்த பதினைந்து வருடங்களாக வெளிநாடுகளில் அலைந்து கொண்டிருக்கிறேன். கடைசி பத்து வருடங்களாக பிரான்ஸில் இருக்கிறேன். என் இளமைப் பருவத்தில் இலக்கியம் படிக்கவோ, அரசியல் நூல்களைப் பயில்வதற்கோ எனக்கு எந்த வாய்ப்புக்களும் கிடைக்கவிலலை.

எனக்கு நினைவுதெரிந்த நாளிலிருந்து என்னைச் சூழவர தட்டையான தமிழ் தேசிய பரப்புரைகளும், விடுதலைப்போருக்கான வீராவேச அழைப்புகளுமே முழங்கப்பட்டன. எல்லாவிதமான சமூக ஒடுக்கு முறைகளுக்குமான தீர்வு தமிழீழத்திலேயே சாத்தியம் என்று நம்ப வைக்கப்பட்டேன்.

எண்பதுகளிலே ஆயுதம் தாங்கிய இயக்கங்களால் கம்யூனிஸ்ட் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சாதி ஒழிப்பு இயக்கங்கள் என்று எல்லாவித மாற்று அமைப்புகளுமே மௌனமாக்கப்பட்டன.

நான் பிரான்சுக்குப் போன பின்பாக ‘புரட்சி கம்யூனிஸ்ட் கழகம்’ என்ற சர்வதேச ட்ராஸ்கிய இயக்கத்தால் கவரப்பட்டு அவர்களோடு இணைந்தேன். நான்கு வருடங்களை நான் அந்தக் கட்சியில் செலவிட்டிருக்கிறேன். அந்த நான்கு வருடங்களில்தான் கட்சித் தோழர்களால் எனக்கு இலக்கியம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கட்சியின் மூலமே என்னிலிருந்த தேசியவாதப் பண்புகளை நான் விட்டொழித்தேன். சர்வதேச கலாச்சாரம், சர்வதேச ஒடுக்கப்பட்டவர்களின் இணைவு போன்ற கருத்தாக்கங்கள் என்னில் அப்போது தொற்றிக்கொண்டன. கட்சித் தோழர்களுடன் இலக்கியம், அரசியல் சார்ந்து உரையாட எனக்கு வாய்ப்புப் கிடைத்தது. அந்தச் சூழல்தான் என்னை எழுதத்தூண்டியிருக்க வேண்டும்.

**நாளை புலிகளின் நிர்வாகத்தில் தனி ஈழமோ, ஓர் அதிகார நிர்வாக அலகோ அமைந்தால் அப்போது தலித்துகளின், ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்நிலை என்ன என்பதுதான் எனது கேள்வி!**

தீராநதி: ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இப்போது உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கிறது. கருத்தே பிரச்சனைக்குரியது என்று கருதுகிறீர்களா அல்லது அதை நடைமுறைப்படுத்துவதில்தான் பிரச்சனைகள் உள்ளதென கருதுகிறீர்களா?.

ஷோபாசக்தி: ஈழப்போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும் விடுதலைப்புலிகளின் கருத்துத்தான் ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களின் கருத்து என்று சொல்வதோ ஏக பிரதிநிதித்துவம் ஒற்றைத் தலைமை என்று கூக்குரலிடுவதோ நியாயமற்றது. இந்த ஏகபிரதிநிதிகளுக்கு மாற்றாக ஒலித்துக் கொண்டிருக்கும் விளிப்பு நிலைக்குரல்களையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக சிங்கள பேரினவாத அரசுகளால், அரச பயங்கரவாதிகளால் தமிழர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களது இன ஒடுக்குதல்தான் இன்று வரையான விடுதலைப்புலிகளின் இருப்புக்குக் காரணம் என்பதில் எனக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

இலக்கு உன்னதமாய் இருந்தால் போதாது அதை நடையும் வழிமுறைகளும் உன்னதமாய் இருக்கட்டும். நாளை புலிகளின் நிர்வாகத்தில் தனி ஈழமோ, ஓர் அதிகார நிர்வாக அலகோ அமைந்தால் அப்போது தலித்துகளின், ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்நிலை என்ன என்பதுதான் எனது கேள்வி!

இப்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள நிலங்களைப் பறித்து நிலமற்றவர்களுக்கு வழங்க அவர்கள் தயாரா? தலித்துகளுக்கான இட ஒதுக்கீடுகள் குறித்தும் தனி வாக்காளர் தொகுதிகள் குறித்தும் பேசுவதற்கு, நடந்துகொண்டிருக்கும் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் ஏன் இடம் வழங்கப்படவில்லை? சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டில், ‘எமது பொருளாதாரக் கொள்கை திறந்த பொருளாதாரக் கொள்கைதான்’ என விடுதலைப்புலிகளின் தலைவர் உறுதிபட அறிவித்தாரே அது குறித்து நாம் பேசவேண்டாமா?

இன்று வரை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகள் மரண தண்டனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்களே, சிறைகளில் மாற்றுக் கருத்தாளர்கள் கொல்லப்படுகிறார்களே இவை குறித்தெல்லாம் நாம் எமது எதிர்ப்புக்குரல்களை எழுப்ப வேண்டாமா?

வீரமும் துரோகமும் தியாகமும் கொலையும் இரத்தமும் குற்றமும் தண்டனையும் நாம் அச்செழுத்துக்களில் படிப்பதுபோல் அப்படியே இருப்பதில்லை. எந்தவிதத் தருக்கங்களுக்கும் அடக்க முடியாத ஒரு ‘பைத்தியக்கார’ வாழ்வைத்தான் கடந்த இருபது வருடங்களாக நாங்கள் வாழ்கிறோம்.

நன்றி: தீராநதி ஜூலை 2004

## புஸ்பராஜாவின் சாட்சியம்

தமிழர்களின் போராட்டவரலாறு கூட ஏக வரலாறு என்று ஆகிவிட்ட நிலையில் புஸ்பராஜாவின் முயற்சி பாராட்டப்படவேண்டியதே. எத்தனை விமரிசனங்கள் முன் வைக்கப்பட்டாலும் எத்தனை குறைபாடுகள் இருந்தாலும் ஏக வரலாற்றுக்கு மாறாக பல வரலாறுகள் இருக்கின்றன என்பதை நிறுவும் முயற்சி பாராட்டப்படவேண்டியதே.

அடேல், பாலசிங்கம் ஆகியோர் பாடியுள்ள புலித்துதிப்பாடல்களை விட புஸ்பராசாவின் சாட்சியம் எத்தனையோ மடங்கு மேலானது. வித்தியாசமானது.

இனவிடுதலைக்காகப் போராடப் புறப்பட்டு வரலாற்றின் அந்தகார இருளில் புதைக்கப்பட்டவர்களை புதை குழியில் இருந்து தோண்டியெடுத்து முன் நிறுத்துகிறார்.

லத்தின் அமெரிக்கபோராட்டக்காரர் சேயின் எலும்புகள் பொலிவியாவில் இருந்து தற்போது தான் கியூபாவிற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

அவர் தனது வரலாற்றில் தன்னை முன்னிலைப்படுத்தலும் முக்கிய பங்காளிகளை தெரிந்தோ தெரியாமலோ குறிப்பிடாமல் விட்டிருந்தாலும் சில விடயங்கள் தகவல் பிழை கொண்டவையாக இருந்தாலும் பல சொல்லாத செய்திகளைச் சொல்கிறார்.

ஒருவரலாறு தெரிந்த மனிதர் என்பதற்காகவே சபாலிங்கம் சுடப்பட்டார். ஆனால் ஏதோ ஒருவகையில் புஸ்பரபஜாவினூடாக உயிர்த்தெழுந்துள்ளது.

திருஞான சம்பந்தர் ஞானப்பாலுண்டு தேவாரம் பாடியது போல் தானே துப்பாக்கி செய்துதானே போராடியதாகக் கூறப்படும் வரலாற்றிற்கு இது நல்ல சவுக்கடி. அண்ணரும் தங்கையுமாக அப்பரின் மரணச்சடங்கிற்கு செல்லும் காட்சி கண்களை கலங்க வைக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவிடம் இருந்து கற்றுக் கொள்ளவேண்டிய விடயங்கள்



இந்தியாவிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு ஏராளமான விடயங்கள் இருக்கின்றன.

மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை, சகிப்புத்தன்மை போன்ற விடயங்களை நாம் எம் அண்டை நாடான இந்தியாவிடம் இருந்து கூடுதலாக கற்றுக் கொள்ள முனைவது சாலவும் பொருத்தமானதாக இருக்கும்.

தோழர் லெனின் போன்ற மகத்தான தலைவர்களால் உருவாக்கப்பட்ட சோவியத்யூனியனே தாக்கு பிடிக்க முடியாமல் போன நிலையில் இந்தியாவின் ஒற்றுமை கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்தியாவில் அதிகாரப் பகிர்வென்பது ஒரு நிகழ்வுப்போக்காகவே அமைகிறது. இந்திய ஜனநாயகம் என்பது தொடர்ந்து இடையறாது செழுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த இரு தசாப்தங்களில் அதிகாரப்பகிர்வு விடயங்களிலும் பின்தங்கிய சமூக அடுக்கினரின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் பாரிய பங்களிப்புக்கள் செயயப்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் இயற்கை விஞ்ஞானத்துறையிலும் மற்றும் கணனித்துறையிலும் இத்தகைய வளர்ச்சியை அவதானிக்கலாம். விவசாயத்துறையில் வீரியமுள்ள விதை உற்பத்தி தொடக்கம் நீர்ப்பாசனத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் சத்தி வளத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகளையும் கனரக உற்பத்தி துறையிலும் கணனி மென்பொருள் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் நாம் இங்கு கருத்திலெடுக்க வேண்டும்.

இந்தியா எதனையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய மாபெரும் நாடு. திறந்த தன்மை அதற்கு உண்டு. தவறுகள் நேர்ந்தால் உள்ளுக்குள்ளேயே சரிசெய்யக் கூடிய இயல்பு இந்தியாவிற்கு உண்டு.

எதனையும் மாறாத்தன்மை கொண்டனவாக கெட்டிபட்டுப் போனவையாக இந்திய சிந்தனை கருதவில்லை.

இந்திய இயற்கையியலதும் சமூகயியலதும் பிரதிநிதியாக அந்த மாபெரும் தேசத்தின் ஜனாதிபதி திகழ்வதைக் காணலாம்.

அந்த நாட்டின் எந்த மொழி வாரி மாநிலத்தை சேர்ந்தவரையும் பிரதமராக ஏற்றுக்கொள்ள எப்போதும் தயாராக இருந்தது. ஜனாதிபதி பதவியும் அவ்வாறே.

இந்தியர்கள் என்ற ஒருமைப் பாட்டுணர்வும் தத்தமது மொழி கலாச்சாரம் சார்ந்த அபிலாசைகளும் இரண்டறக்கலந்து காணப்படுகிறது. உலகம் என்று எடுத்துக் கொண்டால் மூன்றாம் உலகின் வலிமைமிக்க குரலாக இந்தியா திகழ்கிறது என்றால் அது மிகையல்ல.

இந்தியா தென்னாசியாவின் பல மத, கலாச்சார மரபுகளுக்கு மாத்திரமல்ல, ஆசியாவின் பல மரபுகளின் வேராகத் திகழ்கிறது.

அஹிம்சை, மதச்சார்பின்மை, நிற,வர்க்க,சமூக ரீதியாக ஒடுக்கபபட்டவர்களின் குரலாக இந்தியா திகழ்கிறது. அணிசேரா அமைப்பை நிறுவுவதிலும் ஆபிரிக்காவில் நிலவிய நிறவெறிக்கெதிரான போராட்டங்களை ஆதரிப்பதிலும் மத்திய கிழக்கில் பாலஸ்தீனர்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பதிலும், உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசங்களுடன் உறவு கொள்வதிலும் இந்தியா மகத்தான பங்களிப்பை வழங்கியது.

வங்கதேச உருவாக்கத்திலும் அங்கு-ஜனநாயக ஆட்சியமைப்பை உருவாக்குவதிலும் இந்தியா பங்களிப்பை வழங்கியது. பர்மாவில் ஜனநாயகத்திற்கான போராட்டதிற்கு இந்தியா தனது தார்மீக ஆதரவை வழங்கி வருகிறது.

இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முயன்றது. வக்கரித்துப்போன இந் நாட்டின் சிந்தனை முறை எதனையும் பிரசவிக்க இடமளிக்கவில்லை.

கடந்த 60வருடங்களாக இனப்பிரச்சனை புரையோடிப்போயிருக்கிறது. இனப்பிரச்னை நீடித்து நிலவும் இதே காலப்பகுதியில் இலங்கையின் சமூக பொருளாதார வாழ்க்கை சகல தளங்களிலும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. ஜனநாயகம் இல்லாத சமூகத் தளங்களில் வளர்ச்சி என்பது சாத்தியமில்லை.

எனவே குறிப்பாக எமது மொழி கலாச்சார மத பாரம்பரியங்களுடன் தொடர்புபட்ட இந்தியாவின் அனுபவங்கள் இலங்கையில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களுக்கு ஒரு அனுபவ பாடமாக இருக்க முடியும்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்தியா சில அனுபவங்களை இலங்கைக்கு தந்திருக்கிறது. ஆனால் அதனை உரியவர்கள் அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை அதன் முழுமையான அர்த்தத்தில் அமுல் படுத்தப்படுமானால் பிரச்சனை இல்லை.

ஆனால் இலங்கையில் அதிகாரப்பகிர்வு பற்றிய அறிவோ ஜனநாயக மனபபான்மையோ மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. முழு இந்தியாவிற்குமான சுதந்திரப் போராட்டம் ஒரு மாபெரும் ஜனநாயக இயக்கமாக இருந்ததும் இன்றைய ஜனநாயக நெகிழ்வுத்தனமைக்கு காரணமாய அமைகிறது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே பாகிஸ்தான் பிரிவினை நடைபெற்றது. ஆனால் இலங்கையில் சுதநிதிரம் பெயரளவில் கிடைத்த உடனேயே மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது.

இன்று புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால யோசனைகள் ஏக பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையே தவிர ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல.

தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதற்கும், தமிழர்களின் பேரில் குறிப்பிட்ட அணியினரின் கையில் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று கேட்பதிலும் வேறுபாடிருக்கிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கவேண்டும் என்றே கோரிக்கை விடுத்தனர். அல்லாமல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியை இந்தியாவின் ஏக பிரதிநிதி என்று அவர்கள் கூறவில்லை.

அரசியல் துறை உட்பட பல் வேறுதளங்களில் நாம் எமது தனித்துவத்துடன் தென்னாசிய சமூகத்தின் ஒரு பகுதியினராகச் செயற்பட முனைவதே காலப் பொருத்தமானதாகும்.

விஞ்ஞானம்,கலவி, கலாச்சாரம பொருளாதார துறைகளில் நாம் இன்னும் நெருங்கிச் செல்ல வேண்டும் ஏன் சங்கமமாவது மிகவும் சிறப்பு.

குண்டுச் சட்டிக்குள் குதிரை விடும் கிணற்றின் வாயளவு தான் வானம் என்று கருத்து பாமர மனநிலையிலிருந்து விடுபட முயற்சிபபோம்.

# சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்

இலங்கையில் சமாதானம் பற்றிய ஆரவாரங்கள் எப்படி இருந்தாலும் அகதிகளாக உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கை நிலையில் எத்தகைய குறிப்பிட்ட தகுந்த மாற்றங்களும் நடைபெறவில்லை.

2002 யுததநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் 18 மாதங்களில் வடக்கு கிழக்கில் 3லட்சம் மக்கள் தமது சொந்த இடங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ மீள் குடியேறியுள்ளதாக அன்றைய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா அமைப்பின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஆனால் இந்த யுத்தம் ஆரம்பித்த நாளில் இருந்து வெவ்வேறு அகதிமுகாம்களில் வாழ்ந்து வருபவர்களைப்பற்றி நாம் கரிசனை செலுத்தாமல் இருக்கமுடியாது.

குறிப்பாக முஸ்லீம் அகதி மக்களையும் வடக்கு வலிகாமம் போன்ற இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்தவர்களை நாம் மனதில் நிறுத்தவேண்டும். எல்லைப் புறங்களில் இருந்து இடமபெயர்ந்து போன சிங்கள மக்களையும் நாம் மறந்து விடக்கூடாது. எல்லோரும் இன்புற்றிருக்கவே இப்பூமி. அவர்களுடைய சொந்த இருப்பிடங்களில் எல்லோரையும் குடியேற்றுவது சாத்தியமற்றுப் போனாலும் பாதுகாப்பான இடங்களில வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான இடங்களில் இவர்கள் மீள் குடியேறியே ஆகவேண்டும்.



உலக மயமாக்கல் கணனியுகம் என்று பேசப்படும் இந்தக்காலத்தில் அகதி முகாம்களின் அந்தகார இருளில் எமது சமூகத்தின ஒருபகுதியினர் விடப்பட்டிருப்பது எந்த வகையில் நியாயம். இவர்களின் பிள்ளைகள் தமக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டதாகவே கருதுவர். அவர்கள் வாய்ப்புக்களை இழந்து கொண்டிருக்கிறார்கள.இன்னுமொரு பகுதியினர் குடும்பத்தின் தலைவனை அல்லது தலைவியை இழந்த குடும்பங்கள்,பெற்றோர் இருவரையுமே இழந்த சிறுவர் சிறுமியர்,சிறுகைத்தொழிலும்- விவசாயமும்- மீன்பிடியும் நலிவடைந்ததால் சமகால சமூக பொருளாதாரச் சவால்களை முகம் கொடுக்க முடியாத வறுமையில் வாழும் குடும்பங்கள் இவற்றை எல்லாம் கருத்திற்கெடுத்தாக வேண்டும்.

சேதமடைந்தும் வளங்கள் பறறாக்குறையாகிவிட்ட பாடசாலைகள் படிப்பு வாசனையே இல்லாமல் அகதிமுகாம்களில் அல்லாடும் குழந்தைகள் குடும்பத்தின் முழுச்சுமையையும் தமது தலைமேல் சுமந்து நிறகும் பெண்கள் இவர்களுடைய வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்த என்னென்ன செய்யப்படவேண்டும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

நல்லகுடியருப்பு, சிறந்த கல்விச்சூழல், ஆரோக்கியமான செளக்கியசேவை, செப்பனான வீதிகள், குடிநீர், மின்சாரம், தொலைதொடர்பு என்பன முக்கியமானவை. ஈழத்தமிழர்களை இராணுவ யந்திரத்தின் பாகமாவோ, சமூகத்தை ஆயுத மேலாண்மைக்கு கீழ்படியவேண்டியதாகவோ எண்ணுபவர்களுக்கு இவற்றை புரிந்து கொள்வது கடினம்.

சமூகவாழ்வை மேம்படுத்துவதற்கு அர்ப்பண உணர்வு கொண்ட மனித நேயவாதிகள் தேவை. ஆயிரம் கோயில் என்பதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பார்கள்.

ஆயிரம் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பதற்கப்பால் வாழ்வு நலிவுற்று சமூக அடுக்கின் அடித்தட்டில் முகமற்றவர்களாக உழலும் மக்களின் மேமபாட்டிற்கு உதவுவதே மாபெரும் சமூகப்பணியாக இருக்கமுடியும். கோட் சேக்கள் அல்ல. எமக்குத்தேவை காந்தியடிகளின் வழி நிற்போர்.

தி. சிறிதரன் 141a, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.